விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: பத்து

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 பங்குனி 19 ஞாயிற்றுக்கிழமை (02.04.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 104

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாாிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## பாகிஸ்தானுக்கு கடன்வழங்க இலங்கை அரசு இணக்கம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானுக்கு 10 மில்லியன் டொலரை கடனுதவியாக வழங்குவதற்கு இலங்கை அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானுக்கு மூன்று நாட்கள் விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் அந் நாட்டு ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்பிற்குமிடையில் நேற்று நடைபெற்ற உத்தியோகபூர்வ சந்திப்பிலேயே இவ் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானுடன் வலுவான வர்த்தகத் தொடர்புகளை விரிவு படுத்துவதற்காக குறித்த கடனுதவியை வழங்கஜனாதிபதிஇணங்கியுள்ளார்.

பாகிஸ்தான் வர்த்தகர்கள் இலங்கையிலிருந்து பொருட்களை கொள்வனவு செய்வதற்காகவே இக் கடனுதவி வழங்கவுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இஸ்லாமாபாத்தில் பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஸாரப் தலைமையில் விஷேட வரவேற்பு வைபவம் நடைபெற்றது.

இவ் வைபவத்தில் ஜனாதிபதிக்கு விசேட இராணுவ மரியாதையும் வழங்கப்பட்டது. இவ் வரவேற்பு (10 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்திலிருந்து ஜே.வி.பி.வெளியேறும்?

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசியலிருந்து ஜே.வி.பி வெளியேறவுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உள்ளூராட்சித் தேர்தலின்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அமோகவெற்றியீட்டியது. ஆனால் ஜே.வி.பி ஒரு இடத்தை மாத்திரமே கைப்பற்றியது. இந்நிலையில் அரசாங்கத்திலிருந்து விலகி தனியாகச் செயற்பட ஜே.வி.பி முடிபு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி மகிந்த பாகிஸ்தானிலிருந்து நாடுதிரும்பியதும் ஜே.வி.பி தனது முடிவினை தெரிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை ஜே.வி.பி. அரசிலிருந்து விலகினால் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் அரசுடன் இணைவதற்கான சாத்தியப்பாடுகள் காணப்படுவதாக அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மாபெரும் வெற்றி பெற்றது. இவ் வெற்றி (10 ஆம் பக்கம் பார்க்க)

# துணைக் குழுக்களின் ஆயுதங்களை அரசு உடனடியாக களையவேண்டும்

## புலிகள் களைய நினைத்தால் ஆபத்து முன்னாள் க.கா.குழுத்தலைவர் எச்சரிக்கை

(கொழும்பு)

துணை இராணுவக்குழுக்களின் ஆயுதங்களை அரசாங்கம் உடனடியாகக் களையவேண்டும். அவ்வாறு இல்லாது விடுதலைப்புலிகள் அவர்களின் ஆயுதங்களைக் களைய முயல்வார்களானால் அது நாட்டில் மோசமான நிலையை ஏற்படுத்தி விடும் என முன்னாள் கண்காணிப்புக்குழுத்தலைவர் ஹக்றூப் ஹொக்லண்ட் எச்சரித்துள்ளார்.

இராணுவத்தினர் ,ஆயுதக்குழுக்களுக்கு உதவி செய்வது தவறு. ஆனால் அவர்கள் உதவி செய்வதற்கான ஆதாரம் எதுவும் இல்லை என அவர் கூறினார். (10 ஆம் பக்கம் பார்க்க)



## கிழக்குப் பகுதியில் தொடரும் புலிகள் மீதான தாக்குதல்கள்

(கிளிநொச்சி)

மட்டக்களப்பு வாகரை மற்றும் திருமலை நோர்வேத்தீவு கரையோரப் பகுதிகளில் விடுதலைப்புலிகள் மீது நேற்றுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதன்போது ஒரு போராளி படுகாயமடைந்தார். வாகரையில் பனிச்சங்கேணி மற்றும் மருதங்கேணிக்கிடைப்பட்ட பகுதியில் புலிகள் மீது இராணுவத்தினரும் ,துணை ஆயுதக்குழுவினரும் நேற்றுக்காலை 8.30 மணியளவில் இத் தாக்குதலை மேற்கொண்டதாக விடுதலைப்புலிகள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

குறிப்பிட்ட பகுதியில் பதுங்கியிருந்த அவர்கள் அப்பகுதியில்சென்றபோராளிகள் மீது தாக்கியுள்ளனர். இதேபோன்று வாகரை தோணி தாழ்ந்தகற்பகுதியில் துணை ஆயுதக்குழுவினரால் நேற்று மேற்கொள்ளப்பட்ட ஆர்.பி.ஜித் தாக்குதலில் அப்பகுதியில் இருந்த வீடுகள் சில பலத்த சேதமடைந்தன.

தாக்குதல் நடத்தியவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றதை மக்கள் கண்டதாக தெரிவித்துள்ளனர்.இதேவேளை திருகோணமலை சம்பூர் கிழக்கு ,நோர்வேத் தீவுப்பகுதியில் கடற்படையினர் ஊடுருவி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இத் தாக்குதல் சம்பவம் குறித்து திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் திருமலை மாவட்ட போர் நிறுத்தக்கண்காணிப்புகுழுவில் முறையிட்டுள்ளார். (ச–4)

**உள்ளே**

**நாடேஷேத்திரம்:**

**மக்கள் கொடுத்தனர் பேதி**

**மண்கவ்வியது ஜே.வி.பி**

## நவீனரக ஆயுதங்களை வழங்குவதற்கு ஜனாதிபதியிடம் பாகிஸ்தான் உறுதி

பாகிஸ்தானுக்கு மூன்று நாள் விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் அந் நாட்டின் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்பிற்கும் இடையே நேற்று நடைபெற்ற உத்தியோக பூர்வ சந்திப்பின் போது இருநாடுகளும் இணைந்து தீவிரவாதத்தை எதிர்ப்பதாக கூட்டறிக்கையொன்றை வெளியிட்டுள்ளன.

இக் கூட்டறிக்கையில் நாடுகளுக்கிடையேயான அமைதி, பொருளாதார அபிவிருத்தி என்பன பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் பாதுகாப்புத் துறை அமைச்சரசை சந்தித்த ஜனாதிபதி மகிந்த அதன்பின் கூட்டறிக்கையை வெளியிட்டார். அவ்வறிக்கையில் இலங்கை இராணுவத்தினருக்கு வழங்கக்கூடியதாக தயாரிக்கப்பட்ட நவீனரக யுத்த ஆயுதம் பற்றி கூறப்பட்டுள்ளது.

இதைத்தவிர இலங்கை இராணுவத்தினருக்கு பயிற்சி அளிப்பதற்கும் இச் சந்திப்பில் பாதுகாப்பு அமைச்சர் உறுதியளித்தார்.

இவ் விஜயத்தின் இறுதி நாளான இன்று லாகூர் செல்லவுள்ள ஜனாதிபதி அங்குள்ள உள்ளூர் அரசியல் தலைவர்களுடன் சந்தித்துப்பேசவுள்ளார். (ச–5)

EXPOAIR
*your friend in the skies...*
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்:
021 - 222 3891, 222 6297, 077 - 2349999,
011 - 2372952/3, 011 - 2360290/1
e.mail:- jaffna @ expoavi.com, reservations @ expoavi.com.
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மக்கள் கொடுத்தனர் பேதி

# மண் கவ்வியது ஜே.வி.பி.

## குருஷேத்திரம்

-விதுரன்-





நாட்டில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் முடிபுகள் வெளியாகிவிட்டன. நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஜே.வி.பி குறிப்பிடத்தக்களவான சபைகளைக் கைப்பற்றும் என அரசியல் அவதானிகள் எதிர்பார்த்திருந்தனர்.

எனினும் அந்த எதிர்பார்ப்பு வெறும் புஷ்வாணமாகிவிட்டது. இலங்கையின் பலமான கட்சியாக அரசியல் புலத்தில் ஜே.வி.பி வளர்ந்து வருகிறது. அடுத்த பொதுத் தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றும் வலிமை ஜே.வி.பிக்கு வந்துவிடும்.

இதனை உறுதிப்படுத்துவதாக உள்ளூராட்சி தேர்தல் முடிபுகள் அமையுமென ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ஸ, உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிரசாரத்தின் போது விளாசியிருந்தார்.

அட! ஆட்சியைப் பிடிக்குமளவுக்கு ஜே.வி.பி. வந்துவிட்டதா என அரசியல் வாதிகள் உள்ளூர நினைத்துக்கொண்டாலும் விமல் வீரவன்ஸ சொல்வது உண்மையாகிவிடுமோ எனச் சந்தேகமும் அவர்களிடம் இருக்கவே செய்தது.

### மகிந்தவின் காய்நகர்த்தல்

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் மகிந்த ராஜபக்ஷ ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்திருந்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஓர் அங்கமாக இருந்த ஜே.வி.பி ஜனாதிபதியாகவிருந்த சந்திரிகா குமாரதுங்க விடுதலைப் புலிகளுடன் பொதுக் கட்டமைப்பு உடன்படிக்கைக்கு உடன்பட்டுவிட்டதை எதிர்த்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கான ஆதரவை ஜே.வி.பி. விலக்கிக் கொண்டது.

ஜே.வி.பியின் இந் நடவடிக்கையால் சந்திரிகா குமாரதுங்க கடும் சீற்றமும் கொண்டிருந்தார்.

ஜே.வி.பியுடன் எந்தக் கூட்டும் இனிமேல் ஆகாதென்பது அவரின் முடிபாகவிருந்தது. எனினும் சந்திரிகாவின் முடிபுக்கு உடன்படாத மகிந்த ராஜபக்ஷ ஜே.வி.பியுடன் இணைந்து கொண்டார்.

ஜே.வி.பியுடன் தான் விசுவாசம் கொண்டவன் என்பதைக் காட்டுவதற்காக, பொதுக் கட்டமைப்பு உடன்படிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டிய பொறுப்பு பிரதமருடையதாக இருந்தபோதிலும் அதனை ஏற்க அப்போது பிரதமராக இருந்த மகிந்த மறுத்துவிட்டார்.

மகிந்தவின் இந்த நடவடிக்கை ஜே.வி.பியை அவர்பால் நம்பிக்கை கொள்ளவைத்தது. இவ்வாறு தனது நம்பிக்கையை நிரூபித்த மகிந்த ராஜபக்ஷ அடுத்தகட்டமாக ஜனாதிபதித் தேர்தலுக்காக ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்தார்.

அதற்காக பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையை இரத்துச் செய்தல், யுத்தநிறுத்த உடன்படிக்கையை மாற்றியமைத்தல் என்ற இருவிடயங்கள் உள்ளிட்ட உடன்படிக்கை ஒன்றிலும் கைச்சாத்திட்டார்.

### சந்திரிகாவின் கோபம்

ஜனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளர் யார் எனத் தீர்மானிப்பதற்கு முன்னதாகவே மகிந்த முன்னெடுத்த நடவடிக்கைகள் அப்போது ஜனாதிபதியாக விருந்து சந்திரிகா குமாரதுங்கவிற்கும் கோபத்தை ஊட்டியது.

அதிலும் ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்து உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட விடயம் அவருக்கு முன்பும் இனிமேலும் இல்லாதவாறான ஆத்திரத்தைக் கொடுத்தது.

இருப்பினும் அதுபற்றி மகிந்த ராஜபக்ஷ இம்மியும் அலட்டிக்கொள்ளவில்லை.

அவர் தான் வகுத்த சிந்தனையின் வழியில் ஜனாதிபதித் தேர்தலுக்கு முகங்கொடுத்தார். அவரின் அதிர்ஷடமும், ரணில் விக்கிரமசிங்கவின் கெடுகாலமும் தமிழர் தாயகத்தில் ஜனாதிபதித் தேர்தல் புறக்கணிக்கப்பட்டது.

வாக்களித்தால் அது ரணில் விக்கிரமசிங்கவிற்கே என்றிருந்த வடக்குக் கிழக்குத் தமிழ்மக்கள், ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரித்தமையால் மகிந்தவின் வெற்றி சாத்தியமாயிற்று.

வடக்குக் கிழக்கு மக்கள் வாக்களித்தால் ரணில் விக்கிரமசிங்கவே ஜனாதிபதி என்ற நிலைமை தலைகீழாகப் போக மகிந்த ராஜபக்ஷ தனது அறுபதாவது அகவையில் இந்நாட்டின் அதி உயர் அதிகாரம்கொண்ட ஜனாதிபதிப் பதவியை பொறுப்பேற்றுக்கொண்டார்.

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்ததென யாழ்ப்பாணத்து நினைவு மலர்களின் பின்பக்கத்தில் வெளிவரும் பகவத்கீதை வாசகத்தை மகிந்தவும் உச்சரிக்க, கூடவே நின்ற ஜே.வி.பியும் உச்சரித்துக்கொண்டது.

அடேயப்பா! ஜே.வி.பியின் ஆதரவால்தான் மகிந்தவுக்கு வெற்றி கிடைத்ததென்ற கோஷம் தென்னிலங்கையில் சுனாமி வேகத்தில் பரவ, சந்தோசமிகுதி தாங்கமுடியாமல் ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ஸ தனது குறுந்தாடியில் மேலும் ஒருபகுதியைக் குறைத்து முகத்தை வெளிப்பாக காட்டிக்கொண்டார்.

### பொறுமைகாத்த ஜனாதிபதி மகிந்த

மகிந்த ராஜபக்ஷ தான் ஜனாதிபதியாக வெற்றிபெற்றதனால் அடைந்த மகிழ்வைவிட, ஜே.வி.பியே அதீத இறும்பூது எய்தியது. அதற்குக் காரணமும் உண்டு.

ஹாய் சந்திரிகா! எப்படிப் பார்த்தீரா! எங்களின் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டதனால் மகிந்தவுக்கு நாம் ஆதரவளித்தோம். எமது ஆதரவினால் அவர் ஜனாதிபதியானார். உமது ஆதரவு அவருக்குத் தேவையில்லை. ஜே.வி.பியின் பலத்தைப் பார்த்தீரா? இவ்வாறு சந்திரிகா குமாரதுங்கவிற்கு அடிகொடுப்பதில் அடையக் கூடிய திருப்தி காரணமாகவே மகிந்தவின் வெற்றியில் ஜே.வி.பி அளவுகடந்த ஆனந்தமடைந்தது.

எனினும் அதுபற்றி எதுவுமே அலட்டிக்கொள்ளாது அமைதியாக இருந்தார் ஜனாதிபதி மகிந்த.

சந்திரிகாவுக்கு துரோகமிழைத்த ஜே.வி.பி. தனக்கு துரோகம் இழைப்பதற்கு அதிக நாட்கள் எடுக்காது. எனவே அதை ஓரங்கட்டவேண்டும் என்பதிலேயே மகிந்தவின் முழுக்கவனமும் இருந்தது.

### பிரேமதாஸாவின் பாணியில்

முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாசாவின் பாணி மகிந்தவிலும் உண்டு என்பது தென்னிலங்கையின் இராஜதந்திரிகளின் கணிப்பு.

ஆயினும் ஆர்.பிரேமதாஸாவைப் போல் காரிருளில் கதையை முடிக்கும் பாங்கு மகிந்தவிடம் இல்லாவிட்டாலும் சிரித்துச் சிரித்து சிறையில் அடைக்கும் துணிவும் இராஜதந்திரமும் அவரிடம் உள்ளது என்பது மறுக்கமுடியாத உண்மை.

தன்னிடம் இருக்கக்கூடிய துணிவை ஜே.வி.பியின் விடயத்தில் மகிந்த கனகச்சிதமாகக் காட்டிக்கொண்டார்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கான அனுசரணைப் பணியைத் தொடருமாறு நோர்வேக்கு அழைப்பு விடுத்தார்.



சமாதான அனுசரணைப் பணியில் இருந்து நோர்வேயை விலக்கவேண்டுமென்ற ஜே.வி.பிக்கு மகிந்தவின் முதலடி பலமாக விழுந்தபோதிலும் அதன் நோவைக் காட்டிக்கொள்வது தனக்கு அவமானம் என்பதற்காக அதுவிடயத்தில் மௌனம் சாதித்துக் கொண்டது.

### உள்ளூராட்சித் தேர்தலில் ஓரங்கட்டல்

ஜே.வி.பி.யைத் தள்ளிவிழுத்துவதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த ஜனாதிபதி மகிந்த உள்ளூராட்சிசபைத் தேர்தலில் அதனை நன்றாகவே பயன்படுத்திக்கொண்டார்.

சபைப்பங்கீட்டால் ஜே.வி.பிக்குக் குறைவான சபைகளை ஒதுக்குவதன் ஊடாக அந்தக் கட்சிகளை வெளியேற்றமுடியுமென மகிந்த திட்டம் தீட்டினார்.

அவர் தீட்டிய திட்டத்தில் ஜே.வி.பி. சிக்கிக்கொண்டது. அட! ஜனாதிபதித் தேர்தலில் எமது ஆதரவினாலேயே நீர் வெற்றியைப் பெற்றீர். இதை மறந்தா எமக்கான சபைகளைக் குறைத்து ஒதுக்கினீர். பார் செய்கிறோம்.

நாங்கள் தனித்துப்போட்டியிட்டு வெற்றிபெற்றுக்காட்டுகிறோம். இந்தச் சபதத்தோடு ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டிலிருந்து ஜே.வி.பி வெளிப்பறந்தது.

அப்பாடா அட்டமத்தான் அகன்றுவிட்ட நிம்மதி மகிந்தவைத் தேற்றிய போதிலும் அதுபற்றியும் அவர் அலட்டிக்கொள்ளாமல் மௌனமாகவே இருந்தார்.

### தோல்விமேல் தோல்வி

கொட்டியா இருக்கும்வரை இனவாதக் கருத்துக்களைக் கொட்டிவிட்டு சிங்கள மக்களிடம் வாக்குகளைப் பெறமுடியாதென்பது மகிந்தவுக்கு நன்றாகவே தெரியும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஜே.வி.பி தனித்துப் போட்டியிட்டால் படுதோல்வியைச் சந்திக்கும். அவ்வாறு படுதோல்வி கண்டால் தோல்வி கண்ட உன்னுடன் செய்த உடன்படிக்கையை அமுல்படுத்துவது மக்களின் விருப்புக்கு எதிரான செயலாகுமென கூறலாமென்பது மகிந்தவின் நினைப்பு.

அவரின் நினைப்பு நிஜமாகும் வண்ணம் தென்னிலங்கை மக்கள் ஜே.வி.பிக்கு நல்ல பேதி கொடுத்துள்ளனர்.

இனியாவது இனவாத சிந்தனையை விதைக்கும் வினையைச் செய்யாமல் இருக்க ஜே.வி.பி முற்படுமா?

# புலிகள் மீதான தாக்குதல்கள் தொடர்ந்தால் பதில் தாக்குதல்

## எழிலன் எச்சரிக்கை

(கிளிநொச்சி)

படையினர் தங்களது ஆயுதங்களைப் பரீட்சிப்பதாகக் கூறிக்கொண்டு எமது பகுதிகள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தினால் பதில் தாக்குதல் நடத்தும் நிலைமை ஏற்ப



டும் என்று திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக புலிகளின் குரல் வானொலிக்கு நேற்று எழிலன் தெரிவித்துள்ளார்.

வாகரைப் பிரதேசம் கட்டுமுறிவுக்கு அருகில் உள்ள தோணிதாழ்ந்தமடு என்ற இடத்தில் எங்கள் முன்னரங்க காவலரண் உள்ளது. நேற்று அதிகாலை 5 மணியளவில் அந்தக் காவலரண் அருகில் படையினரும் துணை இராணுவக் குழுவினரும் தாக்குதல் நடத்தினர். இதில் காவலரணுக்குச் சிறு சேதமும் அருகில் இருந்து மக்களின் வீடுகளுக்குச் சிறு சேதமும் ஏற்பட்டது. ஆர்.பி.ஜி. ரக ஆயுதங்களையும் சிறிய ரக எறிகணை கொண்டும் இத்தாக்குதலை நடத்தியுள்ளனர்.

மக்களின் பல கால்நடைகள் கொல்லப்பட்டுள்ளன. தொடர்ந்து காலை 9 மணியளவில் பனிச்சங்கேணி பகுதியில் உள்ள முன்னரங்கக் காவலரண் மீது தாக்குதல் நடத்துவதற்காக இராணுவத்தினரும் துணை இராணுக் குழுவினரும் சூனியப் பிரதேசத்தில் பதுங்கியிருந்தனர்.

எங்கள் காவலரணில் இருந்து அவதானித்த எமது போராளிகள் அவர்கள் மீது தாக்குதல் நடத்தினர். இதனையடுத்து இரு தரப்பினரிடையே மோதல் நடந்தது. இதில் எமது போராளி ஒருவர் காயமடைந்தார்.

இராணுவத்தினர் தங்களது பொருட்களைக் கைவிட்டுவிட்டு தப்பியோடியுள்ளனர். பிற்பகல் 1.45 மணியளவில் சம்பூர் அருகே உள்ள நோர்வேத் தீவிலிருந்து கடற்படையினரால் தரைப்பகுதியில் நின்றிருந்த எமது மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

மீனவர்கள் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர். இந்த விடயம் தொடர்பாக உடனடியாக இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்குத் தெரியப்படுத்தினோம்.

கண்காணிப்புக் குழுவினர் இது தொடர்பாக விசாரணை நடத்தியபோது தங்களது ஆயுதங்களை படையினர் பரிசித்துப் பார்த்த போது தவறுதலாக எங்கள் பகுதியில் விழுந்ததாகக் கூறியுள்ளனர். இதைக் கண்காணிப்புக் குழுவினர் எம்மிடம் கூறினர் என்றார்.

தீவுச்சேனை, வெலிகந்தை, வாழைச்சேனை ஆகிய பகுதியில் இருந்துதான் துணை இராணுவக் குழுவினர் வந்து தாக்குதல்களை நடத்துகின்றனர். தீவுச்சேனையில்தான் துணை இராணுவ குழு முகாம் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அண்மையில் நாம் கைது செய்திருந்த ஊர்காவல் படையினர் இருவரும் இதை உறுதிப்படுத்தினர்.

படைத்தரப்பினர் மற்றும் துணை இராணுவக் குழுவினரது நடவடிக்கையால் மூதூர்ப் பகுதி தமிழ் மக்கள் அச்சத்துடனேயே வாழ்கின்றனர். அம் மக்களில் பெருமளவானோர் கடற்றொழிலில் ஈடுபடுகின்றவர்கள். இப்போது பகல், இரவு இரண்டு வேளைகளிலும் மீன் பிடித்தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் அம் மக்கள் தொழிலை இழந்தவர்களாக உள்ளனர். மக்கள் நெருக்கடிக்குள்ளாகி வருகின்றனர். குடாக்கடல் பகுதியில் பெருந்தொகையான மீன்கள் உள்ளன.

ஆனால் கடற்கரையோரத்திலும் தொழில் செய்கின்ற போது தாக்குதல்களை படையினர் நடத்துகின்றனர் என எழிலன் குற்றஞ்சாட்டினார்.

(ச-5)

## அடிக்கல் நாட்டல்

(பொன்னாலை)

கைதடி ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமம் மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலய கட்டட அடிக்கல் நாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7மணிக்கு இடம்பெறவுள்ளது.

(க-49)

## மகிந்த சிந்தனையை மாற்றியமைக்குக!

### த.தே.கூட்டமைப்புக் கோரிக்கை

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இனவாதிகள் தோல்வியடைந்திருக்கின்றார்கள். ஆகவே மகிந்த சிந்தனையை மாற்றியமைத்து புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையை நிம்மதியாகவும் சரியான முறையிலும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

திருகோணமலை நகரசபை ,திருக்கோவில் பிரதேச சபை உட்பட ஐந்து சபைகளை தமிழரசுக் கட்சி கைப்பற்றியதன் மூலம் கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் பக்கம் நிற்கின்றார்கள் என்பதையும் வடக்கு மாகாணத்திலிருந்து கிழக்கைப் பிரிக்க முடியாது என்ற செய்தியையும் வெளிக்காட்டியுள்ளனர் எனவும் கூட்டமைப்பு எம்.பிக்கள் தெரிவித்தனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் முடிபுகள் தொடர்பாகக் கருத்துக் கேட்ட போதே கூட்டமைப்பு எம்.பிக்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

(க-7)

## மில்க்வைற் வெளியீடுகள் பிரசுரங்கள் சேகரிப்பு

மில்க்வைற் வெளியீடுகளையும் பிரசுரங்களையும் ஆவணப்படுத்தும் வேலைத் திட்டத்தில் அகில இலங்கை காந்தி சேவா சங்கம் இறங்கியுள்ளது.

இயற்கை வாழ்வுக்கு முதன்மை கொடுத்து சமுதாயப் பணியாற்றி வந்த சிவநெறிப் புரவலர் க. கனகராசாவின் பணிகளைக் கௌரவிப்பதும் இளம் சந்ததிக்கு சூழல் பாதுகாப்புக் குறித்த விழிப்புணர்வை வழங்குவதும் சமூகப் பணியில் அவர்களை நாட்டம் கொள்ள வைப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இக் காந்தியப் பணிக்கு ஒத்துழைப்பு வழங்க விரும்பும் அன்பர்கள் தம் வசம் உள்ள மில்க்வைற் வெளியீடுகளையோ அல்லது அது தொடர்பான செய்திகளையோ அகில இலங்கை காந்தி சேவா சங்கம் இல.171 முதலாம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரடியாகவே அல்லது தபால் மூலமாகவோ வழங்க முடியும் என்று சங்கத்தின் பிரசாரச் செயலாளர் எம்.ஷாந்தன் சத்தியமூர்த்தி கேட்டுள்ளார்.

(க)

## திருப்பாடுகளின் காட்சி 'பலிக்களம்'

(யாழ்ப்பாணம்)

திருமறைக்கலாமன்றம் தயாரித்துள்ள தவக்கால ஆற்றுகை 'பலிக்களம்' திருப்பாடுகளின் காட்சி எதிர்வரும் 5,6,7,8,9 ஆம் திகதிகளில் தொடர்ந்து காண்பிக்கப் படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு தினமும் மாலை 7 மணிக்கு திருமறைக்கலாமன்ற அரங்கில் ஆரம்பமாகும்.

எனவே பார்வையாளர்கள் இறுதி நாள் வரைக் காத்திருந்து நெருக்கடி நிலைகளை தோற்றிவிக்காது ஆரம்ப நாட்களில் பார்வையிட்டு இந்நிகழ்வு சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(க-132,133)

## பொன்னாலை மேற்கு மக்களுக்கு கடற்படையினரால் அச்சுறுத்தல்

### கஜேந்திரன் எம்.பி. க.கா.குழுவிற்கு கடிதம்

பொன்னாலை மேற்குப் பிரதேசத்தினை ஆக்கிரமித்திருக்கும் கடற்படையினர் அப்பிரதேசத்தின் குடியிருப்பாளர்களை பலவந்தமாக வெளியேற்றியுள்ளதுடன் அப்பகுதியை உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப் படுத்தியுள்ளனர் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக கண்காணிப்புக் குழுவிற்கு கடிதம் ஒன்றை அவர் அனுப்பியுள்ளார். பொன்னாலை தெற்குப் பகுதியில் யு.என்.எச்.சி.ஆர். நிறுவனம் அமைத்துக் கொடுத்த அரை நிரந்த வீடுகளில் பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு மத்தியில் மக்கள் வசித்து வருகின்றனர்.

இவர்கள் வாழ்ந்து வருகின்ற எல்லையோரப் பகுதிகளை கடற்படையினர் முட்கம்பி வேலிகள் போட்டு அடைத்து வைத்துள்ளனர். அங்கு குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. குடிதண்ணீருக்காகவும் ஏனைய தேவைகளுக்காகவும் சென்று வருகின்றபெண்களைப் படையினர் அச்சுறுத்தி வருவதாகவும் என்னிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இச் செயற்பாடுகளை உடன் கட்டுப்படுத்தப்படாது விட்டால் எதிர்காலத்தில் பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்படக் கூடும் என்று அப்பகுதி மக்கள் அஞ்சுகின்றனர்.

எனவே இது தொடர்பாக உடன் விசாரணை செய்து இதனை கட்டுப்படுத்த உடன் நடவடிக்கை எடுக்கும்படியும் இதனை போர் நிறுத்த மீறலாக பதிவு செய்யும்படியும் வேண்டுகின்றேன் என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச)

## குப்பைகளைச் சேகரிக்கும் தொட்டிகளை பொருத்த கம்பங்கள் வந்து சேரவில்லை

யாழ்.மாநகர சபைக்கு மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் முதற்கட்டமாக ஒரு தொகுதி குப்பைகள் சேகரிக்கும் பிளாஸ்ரிக் தொட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.மாநகர சபைஎல்லைகளுக்குட்பட்ட பிரதேச வீதிகளில் இத் தொட்டிகளைப் பொருத்தி குப்பைகளை அத் தொட்டிகளில் சேகரிப்பதன் மூலம் நகரப் பகுதியை சுத்தமாக வைத்திருக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும் இத் தொட்டிகளை வீதிகளில் பொருத்துவதற்கான கம்பங்கள் இன்னும் வந்து சேராததால் கடந்த சில தினங்களாகப் பெய்த மழை காரணமாக நீர் தேங்கிய நிலையில் மாநகர சபை வளாகத்தில் இத் தொட்டிகள் காணப்படுகின்றன.

நகரப் பகுதியை சுத்தமாக வைத்திருப்பதுடன் சுகாதாரத்தைப் பேணுவதுமே இதன் நோக்கமாகவுள்ளது.

(க-132,133)

## நடமாகும் சேவை

(வவுனியா)

வடக்குக் கிழக்கு மாகாண விவசாய அமைச்சினால் நடத்தப்படும் முதலாவது நடமாடும் சேவை நாளை திங்கட்கிழமை வவுனியா மாவட்டத்தில் தரணிக்குளத்தில் நடைபெறவுள்ளது.

விவசாய அமைச்சின் கீழ் உள்ள அனைத்துத் திணைக்கள தலைவர்களும் நடமாடும் சேவையில் பங்கு பற்றுவார்கள். அத்துடன் விவசாய உள்ளீடுகளும் இந் நடமாடும் சேவையின்போது விற்பனை செய்யப்படும் என மாவட்ட விவசாய விஸ்தரிப்புப் பிரிவு உதவிப் பணிப்பாளர் திருமதி எஸ்.ஜெகநாதன் தெரிவித்தார்.

இந்த நடமாடும் சேவையின் மூலம் காணி தொடர்பான அனைத்துப் பிரச்சினைகளுக்கும் உடன் தீர்வு காண முடியும். காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ள நடமாடும் சேவையில் விவ சாய ஓய்வூதியத் திட்டம், விபத்துக் காப்புறுதி போன்ற விவசாயிகளுக்கு நன்மை அளிக்கக் கூடிய விடயங்களும் நடைமுறைப்படுத்தப்படும்.

(க-7)

## இன்று ஒரு தகவல்

# தூக்கம் வரவில்லை

உலகத்தில் எது எதற்கோ ஆராய்ச்சிக் கூடங்கள் உள்ளன வல்லவா அது மாதிரி தூக்கத்தைப் பற்றி ஆராயச்சி செய்வதற்கு ஒரு ஆராய்ச்சிக்கூடம் இருக்கிறது சார்! அப்படி ஆராய்ச்சி செய்யவேண்டும் என்றால் அதற்கு விழித்திருக்க வேண்டும் அல்லவா...? அதனால் அந்த ஆராய்ச்சிக்கூடம் இங்கே இல்லை. அமெரிக்காவில் பாஸ்ரன் பல்கலைக்கழக மருத்துவமனையில் அது இருக்கிறது. அங்கே தூக்கததைப் பற்றி பல விதமான ஆராய்ச்சிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த ஆராய்ச்சிக்கூடத்தில் இயக்குநராக இருக்கும் ஒரு நிபுணர் என்ன சொல்கிறார் தெரியுமா? “உங்களுக்கு தூக்கம் வரவில்லையா? நீங்கள் நன்றாகத் தூங்குவதற்கு தாராளமாக சில யோசனைகளை என்னால் சொல்ல முடியும்'' என்கிறார்.

உணவு மனநிலை, தூங்கும் இடத்தின் சூழ்நிலை, படுக்கைக்கு செல்லும் போது உள்ள பழக்கவழக்கங்கள் போன்றவற்றின் காரணமாக ஒருவருக்குத் தூக்கம் வராமல் போகலாம்... தூக்கம் வராமல் போனதற்கு இது தான் காரணம் என்றால் அதையெல்லாம் சுலபமாக கட்டுப்படுத்தலாம் என்கிறார் அவர். தூக்கத்தை வரவழைக்கக்கூடிய ஒரு நல்ல மருந்து உடற்பயிற்சி. உடலை அயற்சியின்றி உறங்கவைக்கும் உடற் பயிறசி தூக்கத்தை வரவழைக்கும். ஆனால் ஒன்று. படுக்கப்போகும் நேரத்தில் உடற்பயிற்சிகளை செய்யக்கூடாது. கொஞ்சம் முன்பாக, பகலிலேயே இந்த பயிற்சிகளை செய்வது நல்லது.

தூககம் வராமல் அவதிப்படுபவர்கள் பிற்பகல் நேரங்களில காபி, தேனீர் போன்ற பானங்களை அருந்தக கூடாது. மது அருந்துவது கூட தூக்கத்தை பாதிக்கும்.வெது வெதுப்பான நீரில் குளிப்பது, தியானத்தில் ஈடுபடுதல், ஓய்வாக இருப்பது, படுப்பதற்கு முன்பு ஒரு குவளை பால் அருந்துவது இதெல்லாம் தூக்கத்தை வரவழைப்பதற்கு மிகவும் உதவியாக இருக்கும.

இன்னொரு விடயம். தூங்கவேண்டுமே என்ற கவலை வேண்டாம்.... அப்படி நினைத்துக் கவலைப்படுவதை விட்டுவிடுங்கள். தூக்கம் வரவில்லையா? உடனே படுக்கையைவிட்டு எழுந்திருங்கள். வெளியே வாருங்கள்... வேறு ஏதாவது வேலையில் ஈடுபடுங்கள். கொஞ்ச நேரம் உலாவுங்கள் அல்லது ஏதாவது புத்தகம் படியுஙகள் களைப்பு ஏற்பட்டால் மறுபடியும் படுக்கைக்குப் போங்கள். தூக்கம் தானாக வரும்.

ஒரு விடயத்தை மட்டும் நன்கு நினைவில் வைத்திருங்கள். படுக்கைக்குப்போகும் போது உங்களது மற்ற எல்லாப் பிரச்சினைகளையும் மறந்துவிடுங்கள். “அது எபபடி சார் முடியும்? அந்த நேரம் தானே எல்லாப் பிரச்சினையும் வரிசையாக நினைவுக்கு வருகின்றது என்று நாம் நினைக்கலாம். ஆனால் பழக்கத்தில அதை நாம் மாற்றிக கொள்ள முடியும்.கொஞ்சம் முயற்சி செய்யவேண்டும்... அவ்வளவு தான்.

இது எல்லாமே ஆராய்ச்சி செய்து பார்த்துவிட்டு அந்த நிபுணர் சொல்லும் கருத்துத்தான் இன்னொரு விசயமும் அவர் சொல்லுகிறார். அது என்னவென்றால்.... உடல் கோளாறு காரணமாக தூக்கம் வராமல் அவதிப்படு பவாகளுக்கெல்லாம் இந்த யோசனை சரியாக வராது என்கிறார் அவர். அதற்கெல்லாம் மருத்துவ சிகிச்சை கொடுத்துத்தான் சரி செய்யவேண்டும். சிலருக்கு நடு இரவில் மூச்சுத்திணறல் ஏற்பட்டு தூக்கம் வராமல் போகும். ஊரெல்லாம் தூங்கும் போது தான் மட்டும் தூங்காமல் விழித்திருப்பது, ஊரெல்லாம் விழித் திருக்கும் போது தான் மட்டும் தூங்குவது போன்ற கோளாறுகளால் சிலபேர் பாதிக்கப்படலாம்.

கால்,தசை முறுக்கிக்கொள்வதனால் சிலருக்கு அடிக்கடி விழிப்பு வரலாம்! மனஅலட்சி காரணமாக சிலருக்கு தூக்கம் வாரது. இது போன்ற கோளாறுகளுக்கெல்லாம் அதற்குத் தகுந்த மாதிரி சிகிச்சை கொடுத்துத்தான் சரி செய்ய வேண்டியிருக்கும். எந் தக் கோளாறும் இல்லாமல் தூக்கம் வராவிட்டால் ஆரம்பத்தில் சொன்ன முறைகளைக் கடைப்பிடித்துப் பார்க்கலாம். தூக்கம் வந்து விட்டால்.... யோசனை சொன்ன அந்த நிபுணருக்கு நன்றி சொல்லலாம்.

ஒருவர் “ஏன் சார்? பஸ்ஸில் தூங்குவது கெட்ட பழக்கமா?'' என்று கேட்டார். “இல்லையே! நான் கூட பஸ்ஸில் போகும்போது தூங்கிக்கொண்டுதானே போவேன்” என்றார். இன்னொருவர் “பிறகு ஏன் சார் என்னை டிரைவர் வேலை வேண்டாம் என்று வீட் டுக்கு அனுப்பினார்கள்? என்றார் அவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# எந்தவொரு உள்ளூராட்சி சபைக்கும் மறு வாக்குப் பதிவு நடத்தப்படமாட்டாது

## தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க

(கொழும்பு)



தேர்தலை, சுயாதினமாகவும் நேர்மையாகவும் நீதியாகவும் நடத்துவதற்கு 17ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்தின் கீழ் பல்வேறு அதிகாரங்கள் தேர்தல் ஆணையாளருக்கு உள்ளன.

ஆனால் இந்த அதிகாரங்களை பயன்படுத்த இது வரை இடமளிக்கப்படவில்லை. இனிமோலாவது அதற்கான வாய்ப்புகள் வழங்கப்படவேண்டும் என்று தேர்தல் ஆணையாளர் தயானாந்த திஸாநாயக்க கேட்டுக் கொண்டார்.

எந்தவொரு உள்ளூராட்சி சபைக்கு மறு வாக்குப் பதிவு நடத்தப்படமாட்டாது அதற்கான தேவை ஏற்படவில்லை. எந்தவொரு பகுதியிலும் மறுவாக்குப்பதிவு நடத்தும் வகையிலான தேர்தல் வன்முறைகள் இடம் பெறவில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

ராஜகிரியவின் உள்ள தேர்தல் செயலகத்தில் நேற்று முன்தினம்மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துத்தெரிவிக்கையில், இம்முறை உள்ளூராட்சிச் சபைத்தேர்தலில் நாடு தளுவிய ரீதியில் 63 சதவீதமானோர் வாக்களித்துள்ளனர்.

சில இடங்களில் 65 சதவீதத்திற்கும் 70 சதவீததத்திற்கும் இடைப்பட்டவர்கள் வாக்களித்துள்ளனர்.

கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் இத்தேர்தல் அமைதியாகவும் வன்முறைகள் குறைந்ததாகவும் நடைபெற்றுள்ளது.

மக்கள் இத்தேர்தலில் மும்முரமாக வாக் களித்தனர். வடக்கு-கிழக்கு தேர்தல் நடைபெற்ற திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் மக்கள் ஆர்வத்துடன் வாக்களித்தனர் என்று மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் திகதி விரைவில் நிர்ண யிக்கப்படும் என்றும் தேர்தல்கள் ஆணையாளர் தயா னந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (க-4,9)

# அதிகரித்துவரும் சட்டவிரோத மதுபான விற்பனை

(யாழ்பாணம்)

சட்டவிரோதமாக சாராயம், கசிப்பு, பியர், கள் முதலியவற்றை விற்பனை செய்த குற்றத்திற்காக இவ்வாண்டு முதல் 3மாத காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் மாத்திரம் 94 பேர் யாழ். மது வரித்திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் சட்டவிரோத சாராய விற்பனையில் ஈடுபட்ட 27பேரும், கசிப்புவிற்பனையில்ஈடுபட்ட 3பேரும், பியர் விற்பனையில் ஈடுபட்ட 3பேரும், கள்ளுவிற்பனையில் ஈடுபட்ட 61பேரும் அடங்குவர்.

கடந்த மார்ச் மாதத்தில் மாத்திரம் சட்டவிரோத சாராய விற்பனையில் ஈடுபட்டவர்கள் 9பேரும், கசிப்பு விற்பனையில் ஈடுபட்டவர் ஒருவரும், பியர் விற்பனையில் இரண்டுபேரும், கள்விற்பனையில் 40 பேரும், மதிவரித்திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முன்னைய மாதத்துடன் ஒப்பிடும் இடத்து சென்ற மாதம் சட்டவிரோத மதுபான விற்பனை அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகிறது. இவ்வருடம் இவர்களிடமிருந்து நீதிமன்றத்தினால் மொத்தம் ஒரு இலட்சத்து 49 ஆயிரத்து 500ரூபா தண்டப்பணமாக அறவிடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் 24 லீற்றர் கசிப்பு விற்பனை செய்த குற்றத்திற்காக மீனாட்சி அம்மன் வீதி கொட்டடியைச் சேர்ந்த ஒரு நபருக்கு இரண்டுவருட சிறைத்தண் டனை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.(து-132,133)

# கட்டாக்காலி மாடுகளைப்பிடித்து இறைச்சியாக்கும் வியாபாரிகள்!

## பொதுமக்கள் ஆட்சேபனை

(யாழ்ப்பாணம்)

மறவன் புலவுப் பகுதியில் கட்டாக்காலிகளாக நடமாடும் மாடுகளை இறைச்சிக்கடைக்காரர்கள் அனுமதியின்றி பிடித்து இறைச்சிக்காக வெட்டுகின்றமைக்கு நாவற்குழி பகுதி மக்கள் பலத்த ஆட் சேபனை தெரிவித்துள்ளனர்.

அத்துடன் தற்போது கைதடிப்பகுதியில் இருக்கும் கொல்களத்தை நாவற்குழிப்பகுதிக்கு இடமாற்றம் செய்யும் யோசனையையும் நாவற்குழி மக்கள் எதிர்த்துவருகின்றனர்.

இதே சமயம் கைதடியில் இருக்கும் கொள்கலத்தில் வெட்டப்படும்மாட்டிறைச்சியை நாவற்குழிக்கு சைக்கிளில் கொண்டுவரும் போது படையினர் பறித்துவருவதாக இறைச்சி விற்பனையாளர்கள் நாவற்குழிப் பகுதிக்கான கிராம சேவையாளரிடம் முறைப்பாடு செய்துள்ளனர் எனவும் அறியப்படுகின்றது.

இரண்டாயிரமாம் ஆண்டில் இடம்பெற்ற இடம் பெயர்வினைத்தொடர்ந்து மறவன்புலவுப் பகுதியில் பல நூற்றுக்கணக்கான மாடுகள் மற்றும் ஆடுகள் கட்டாக்காலிகளாக திரிகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (க-16)

# வடமராட்சியில் தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வு

(துன்னாலை)

வடமராட்சி வல்லிபுரம் செட்டியகாடு பகுதிகளில் மீண்டும் சட்டவிரோதமாக மணல் அகழப்படுவதாகவும் இவ்வாறு அகழப்படும் மணலை சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் செல்வதாகவும் கூறப் படுகின்றது.

சுமார் 10ற்கும் மேற்பட்ட இளைஞர்கள் இவ்வாறு அகழப்படும் மணலினை சைக்கிள்களில் கொண்டு சென்று விற்று வருவதாகவும் கூறப்படுகின்றது. இதே வேளை உழவு இயந்திரங்களிலும் கண்டர் வாகனங்களிலும் மணல் அகழ்வில் ஈடுபட்ட சுமார் 40 ற்கும் மேற்பட்டோர் சூழல் வளம் பேணுவோரால் பளைப் பகுதிக்கு அழைக்கப்பட்டு தண்டிக்கப்பட்டு எச்சரிக்கையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இந்நிலையிலேயே இச் சைக்கிள் ஊடான மணல் அகழ்வு இடம்பெற்றுவருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (க-101)

# வி.கழகங்களுக்கிடையில் முழு நிலைப்போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலர் பிரிவுகளி லும் உள்ள விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் முழு நிலை போட்டிகள் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வார காலப் பகுதியில் யாழ். மாவட்ட செயலக விளையாட்டு அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது அனைத்துபிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர்களினாலும் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

அத்துடன் ஜுன் மாத நடுப் பகுதியில் யாழ் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மெய்வல்லுநர்போட்டியினை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

*போட்டி விபரங்கள் வருமாறு:*

★ வலைப்பந்தாட்டப்போட்டி ஏப்ரல் மாதம் 14ஆம் திகதி தொடக்கம் 16ஆம் திகதி வரை நல்லூர் பிரதேச செயலகப் பிரிவிலும்.

★ ஆண்களுக்கான எல்லைப் போட்டி மே மாதம் 6ஆம் திகதி தொடக்கம் 7ஆம் திகதி வரை கோப் பாய்ப் பிரதேச செயலகப்பிரிவிலும்.

★ ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி- 2கட்டங்களாக இடம்பெறும். முதல் கட்டம் மே மாதம் 8ஆம் திகதி தொடக்கம் 11ஆம் திகதிவரையும் இரண்டாவது கட்டம் 15ஆம் திகதி தொடக்கம் 18ஆம் திகதி வரையும் உடுவில்பிரதேச செயலகப் பிரிவில் இடம் பெறும்

★ ஆண்கள் , பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி - மே மாதம் 12ஆம் திகதி கோப்பாய்ப் பிரதேச செயலகப் பிரிவிலும்.

★ பெண்களுக்கான கிரிக்கெற் போட்டி- மே மாதம் 13ஆம் திகதி நல்லூர் பிரதேச செய லகப் பிரி விலும்.

★ பெண்களுக்கான எல்லைப்போட்டி- மே மாதம் 14ஆம் திகதி யாழ்.பிரதேச செயலகப் பிரிவிலும்.


★ ஆண்களுக்கான கிரிக்கெற்போட்டி -மே மாதம் 20 ஆம்திகதி தொடக்கம் 21ஆம் திகதி சண்டிலிப் பாய் பிரதேச செயலகப்பிரிவிலும்.

★ ஆண்கள் பெண்களுக்கான கபடிப்போட்டி- மே மாதம்27ஆம்திகதிதொடக்கம்28ஆம்திகதிவரைகரவெட்டிப் பிரதேசசெயலகப் பிரிவிலும் இடம்பெறும். (க-132,133)

# பிறர்மூலம் கிடைக்கும் உதவிகள் இறைவனின் உதவிகளேயாகும்

## பரமபிதாகாட்டிய பாதை

நாம் செல்லும் வழியிலே எமது கால்களில் பலமுட்கள் குத்தி விட்டால் இவ்வழியில் செல்வது



[illegible]ரமானது. நாம் வேறு வழியால் செல்வது நல்லது என்று எமது பயணப்பாதையில் இருந்து விலகிச் செல்கின்றோம். ஆனால் அப்பாதையில் காலில் குத்தும் முட்கள் இல்லாமல் இருக்கலாம். அங்கே கள்வர் பயமும், எதிரிகளின் சூழ்ச்சியும் நிறைந்து இருக்கும் கண்களுக்குத்தெரியாத எதிர்ப்புக்கள் காத்திருக்கும். எமது உல்லாச வாழ்வை சூறையாடப் பலர் காத்திருப்பார்கள்.

எனவே சிறிய எதிர்ப்பைக் கண்டு பின்வாங்கி நாம் பெரிய பாதகங்களைச் சந்திக்க வேண்டி வரும் அப்போது நாம் நிலை தளர்ந்து போவோம். எமது இறுமாப்பான வாழ்வு சிதைக்கப்பட்டு விடும். நல்ல நண்பர்களையும் [illegible]ற்காரியங்களை வாழ்க்கையில் தேடிக்கொள்ளவேண்டும். அப்போது எம்மை எதிர்ப்பவர்கள் தோற்கடிக்கப்படுவார்கள். ஆன்மீக பலம் ஒன்று எம்மில் உருவாகும்.

### பெரியோரைக் கனம்பண்ணல்

பெரியோரைக் கனம் பண்ணாத மூத்தோரை மதிக்காத, பெற்றோரை அலட்சியம் செய்கின்ற கிழிப்படிதலற்ற சமூகம் உருவாகிக் கொண்டு வருகின்றது என்று பல பெரியவர்களும், பெற்றோர்களும் முதியவர்களும் மனம் வெந்து கொண்டு இருக்கின்றார்கள். பணத்தின் ஆதிக்கமும், தொழிலின் சம்பாத்தியத்தினாலும் குடும்பங்களிலே அன்னிய பட்ட வாழ்க்கை தொடர்கின்றது.

அன்பினால் பலப் படுத்தப் படவேண்டிய உறவுகள் அகந்தையினால் பிரிவினைக்கு உள்ளாகின்றன. துன்பங்களின் ஊடே உரமுட்டப்படவேண்டிய உள்ளங்கள் துவண்டு போகும் நிலை உருவாகுகின்றது. கற்றறிந்த சமுதாயம் கயமைத்தனமான செயல்களில் ஈடுபடுகின்றது. திறமைகள், அனுபவங்கள் தள்ளிவைக்கப் படுகின்றன. எங்குமே கீழ்ப்படிதலற்ற நிலை. பொறுப்பற்ற செயற்பாடுகள் அநீதி மனப்பாங்குகள்.

உரிமையாளனைப் பகடைக் காயாக்கி உறுஞ்சும் போக்குகள் பெருகிவருவது வேதனை தரும் விடயமாகக் காணப்படுகின்றது. பாதிக்கப்பட்டவர்களின் பரிதாப வார்த்தைகள் காதுகளைப் பொய்யாக்குகின்றன. அனைத்துக்கும் காரணம் கீழ்ப்படிதலில்லாமையே என்பது தெளிவாகத் தெரிகின்றது.

இயேசு இறைமகனாக இருந்தும் தம்மைத் தாழ்த்தி அடிமையின் தன்மை பூண்டு மனிதருக்கு ஒப்பானார் என்று வேதம் சொல்கின்றது. இதனாலே இயேசு எல்லோருக்கும் மேலானவராகவும் எல்லோரும் முழந்தாட்படிய வேண்டியவராகவும் இறைவானலே உயர்த்தப்பெற்று மாட்சிமைப்படுத்தப்பட்டார்.

### பிறருக்காக வாழ்தல்

இவ்வுலகில் நாம் எமக்கென்று வாழாது மற்றவர்களுக்கென்றே வாழவேண்டியவராகின்றோம். நாம் வாழ இன்னொருவர் துணையும் உதவியும் நிச்சயம் தேவை. எனவே எமக்கென்று வாழ்வதென்பது மடமையான செயலாகும். நோயுற்றாலும் காயப்பட்டாலும் இறந்தாலும் எம்மாலே எல்லாம் செய்ய முடியாது. இறைவனின் உதவியே பிறர் மூலம் எமக்குக் கிடைக்கிறது.

எனவே ஒவ்வொரு மனிதனும் மாண்புக்கு உரியவன் மதிக்கப்பட வேண்டியவன். இயேசு கூறுகின்றார். தமக்கென்றே வாழ்வோர் தம் வாழ்வை இழந்துவிடுவர். இவ்வுலகில் தம் வாழ்வைப் பொருட்டாகக் கருதாதோர் நல்வாழ்வுக்குத் தம்மை உரியவராக்குவர்.

(யோவான் 12:25)

### எளிமையை அணிவோம்

எளிமையான மனம் தெளிந்த நீர் போன்றது இறைவனின் முகம் அங்கே தெரிகின்றது. என்றுமிக்ஸ் என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார். எளிமை உள்ள இடத்தில் தான் தாழ்மை ஊற்றெடுக்கும் கடவுளின் வேலை ஒவ்வொன்றும் கடினமானது. ஆனால் நிறைவேறுகின்றது. கடினமனங்கள் மாற்றமடைய வேண்டும் என்றே தவக்காலம் கடவுளால் அருளப்பட்டது. நம்மால் நம்ப முடியாத காரியங்கள் விசுவாசிப்பதன் மூலம் நிறைவேறும்.

மனிதன் மன மாற்றம் பெறுகின்றான் என்றால் அதுவே விண்ணகத்தில் மகிழ்ச்சியை அளிக்கும் செயலாகும். எவரும் அழிவுறாது இறைவனைச் சேர வேண்டும். ஆண்டவரை நம்புவோர் எந்தத் தீர்ப்புக்கும் தப்பித்துக் கொள்வர். உலக செல்வங்களில் மனதைச் செலுத்துவோர் தண்டனைத் தீர்ப்புக்கு தப்பிக்க முடியாது இறைவன் பக்கமாக மனமாற்றம் பெறுவோம் எதிரியை பழிவாங்கும் இழிச்செயல் களைவோம். ஆசீர் பெறுவோம். □

அபீர் ராஜன்

## நூல் வெளியீடு

கரவெட்டி யார்க்கரு விநாயகர் ஆலய முதலாம் திருவிழா சபையினரால் யார்க்கரு அந்தாதி எனும் நூல் இன்று பி.ப.5 மணிக்கு ஆலய முன்றலில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

சிலேடைக்கவி பண்டிதர் க.கணபதிப்பிள்ளையினால் எழுதப்பட்ட இந்நூலுக்கு பிள்ளைக்கவி வ.சிவராசசிங்கம் உரை ஆசிரியராகவும் உள்ளார்.

நூல்வெளியீட்டு விழாவில் வெளியீட்டுரையை கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலனும் நூல் ஆய்வினை யாழ்.பல்கலைக் கழக தமிழ்துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராசாவும், யாழ்.பல்கலைக்கழக முன்னை நாள் ஆங்கில போதனாசிரியர் ச.விநாயகமூர்த்தியும் நிகழ்த்தவுள்ளனர். (க-101)

## கலை விளையாட்டுத் திடல்

செயல்திறன் அரங்க இயக்கமும் கைதடி வடக்கு நவபுரம் மகளிர் குழுவும் இணைந்து நடத்தும் தேட்டம் கலை விளையாட்டுத் திடல் இன்று மாலை 6 மணிக்கு நவபுரம், கைதடி வடக்கு விளையாட்டுமைதானத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.உமாபாலன் பிரதம விருந்தினராகவும், செயல்திறன் அரங்க இயக்குநர் தே.தேவானந்த் சிறப்பு விருந்தினராகவும், கிராம உத்தியோகத்தர் செ.சிவசுப்பிரமணியம், நவபுரம் எருதிடல் அ.த.க.பாட சாலை அதிபர் வே.பாலசுப்பிரமணியம், நவபுரம்நல சனசமூக நிலையத் தலைவர் சி.மன்மதராசா, கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ச.தங்கராசா, கைதடிக் கோட்ட முன்பள்ளி முதன்மை ஆசிரியை திருமதி சுபத்திரா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்வார்கள். (து)

## இராசிபலன்

**02.04.2006**
**(பங்குனி 19, ஞாயிற்றுக்கிழமை)**
**சதுர்த்தி முற்பகல் 10.00மணிவரை**
**கார்த்திகை பிற்பகல் 4.14 மணிவரை**
**இராகுகாலம் 4.41-6.11மணிவரை**
**சுபநேரம் 9.11-10.41மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | பணவிரயம், காரியதாமதம், நண்பர்கள் சந்திப்பு, அமைதிக் குறைவு. |
| இடபம் | புதிய முயற்சி, பெரியோர் சந்திப்பு, தெய்வ சிந்தை, ஆழ்ந்த சிந்தை. |
| மிதுனம் | சயன சுகக்குறைவு, 'வேலைச்சுமை, பூர்வபுண்ணியகருமம், சுபசெலவு. |
| கடகம் | சகோதரர் உதவி, பெருமையடைதல், தொழில்சிந்தை, காரியசித்தி. |
| சிங்கம் | கடினமுயற்சி, சுபநிகழ்வு, நண்பர்கள் உதவி, தெய்வநம்பிக்கை. |
| கன்னி | பித்தரோகம், சரீரப்பிரயாசை, வாக்கு மேன்மை, பிரயாணம். |
| துலாம் | வீண்தொல்லை, காரியதடங்கல், அபகீர்த்தி, திடீர்நன்மை. |
| விருச்சிகம் | விருந்துபசாரம, சிநேகிதர் சந்திப்பு, புதிய திட்டம், சுபசெலவு.. |
| தனுசு | சுபநிகழ்வு, நல்லமுயற்சி, தெய்வசிந்தை, மனமகிழ்ச்சி. |
| மகரம் | அமைதிக்குறைவு, சகோதரர் உதவி, சொத்துப்பிணக்கு, முயற்சிதாமதம். |
| கும்பம் | சிந்தனை மிகுதி, பூர்வபுண்ணிய கருமம், சுபசெலவு, முயற்சிதாமதம். |
| மீனம் | அதிகாரம், முயற்சி கைகூடும், பெருமையடைதல், போசனசுகம். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**
- வளவன்

## காலாவதியான மருந்துகள் விற்பனை; 2 கடை உரிமையாளர்களுக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

காலாவதியான மருந்துப் பொருட்களை விற்றனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் மருந்தக உரிமையாளர்கள் இருவருக்கு அபராதம் விதிக்கப் பட்டுள்ளது.

யாழ்.நகரப் பகுதியில் உள்ள மருந்தகங்களில் சுகாதாரப் பரிசோதகர்கள் சமீபத்தில் சோதனை நடத்தினர்.

அப்போது இரு மருந்தகங்களில் காலாவதியான மருந்துகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அந்த மருந்தகங்களின் உரிமையாளர்கள் இருவர் மீது யாழ்.நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

உரிய உரிமம் பெறாமல் ஆங்கில மருந்துகளைக் களஞ்சியப்படுத்தி வைத்திருந்தமை, காலாவதியான மருந்துகளை விற்பனைக்கென காட்சிப்படுத்தி வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் அவர்கள் மீது சுமத்தப்பட்டிருந்தன.

கடந்த புதன்கிழமை இந்த வழக் குத் தொடர்பான விசாரணை இடம்பெற்றது.

அப்போது மருந்தக உரிமையாளர்கள் குற்றங்களை ஒப்புக்கொண்டனர். அதனையடுத்து ஒரு குற்றத்திற்கு 10 ஆயிரம் ரூபா வீதம் அவர்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

(க-132, 133)

## 22 உள்ளூராட்சி மன்றங்களுக்கு மே மாத முதல் வாரத்தில் தேர்தல்?

(கொழும்பு)

நீதிமன்ற வழக்கு விசாரணைகளில் ஒத்திவைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு மே மாத முதல் வாரத்தில் தேர்தல் நடாத்தப்படவிருப்பதாக தெரிய வருகிறது.

இவ்வாறு ஒத்திவைக்கப்பட்டி ருக்கும் மன்றங்களுக்கான தேர் தலை ஒரே தினத்தில் நடாத்துவதற்கும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க உத்தேசித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நீதிமன்ற வழக்கு விசாரணைகளால் 22 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

இவற்றுக்கே எதிர்வரும் மே மாத முதல் வாரத்தில் தேர்தலை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

அதேநேரம் வடக்கு- கிழக்கிலுள்ள 6 மாவட்டங்களில் இருக்கின்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் ஆறுமாதங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. (க-9)

## சமாதான எதிர்ப்பு நடவடிக்கைகளை நாட்டு மக்கள் நிராகரித்துள்ளனர்!

### திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கொண்டு வருகின்ற சமாதான செயற்பாடுகளுக்கும் அதற்கு ஐ.தே.க வழங்கி வரும் ஆதரவிற்கும் நாட்டு மக்கள் உள் ளூராட்சி சபைத் தேர்தல் மூலம் முழுமையான ஆதரவினை வழங்கியுள்ளனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியும், ஜாதிக ஹெல உறுமயவும் மேற்கொண்டுவரும் சமாதான எதிர்ப்பு நடவடிக்கைகளை நாட்டு மக்கள் நிராகரித்துள்ளனர் என்றும் அவர் மேலும் கூறினார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் தொடர்பாக கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குமிடையில் வாக்குகள் சிதறியுள்ளன.

ஆனால் மக்கள் விடுதலை முன்னணியினதும் ஜாதிக ஹெல உறுமயவினதும் வாக்குகள் பறிபோயுள்ளன என்றார். (க-7)

## மானிய அடிப்படையில் உரத்தை வழங்க 10 மில்லியன் ரூபா தேவை

மானிய அடிப்படையில் உரத்தை விநியோகிப்பதற்கு 10 மில்லியன் ரூபா நிதியாவது இருந்தால் தான் இந்தத் திட்டத்தினை வெற்றிகரமாக அமுல்செய்ய முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பெரும்போக செய்கையின் போது அறிமுகம் செய்யப்பட்ட உரமானிய விநியோகம் விவசாயிகளுக்கு முழு அளவில் பயனைக் கொடுக்காவிட்டாலும் ஓரளவு பலன் கிடைத்துள்ளது.

எனினும் போதியளவு நிதி உரத்தை ஏற்றியிறக்கும் வசதிகள் சந்தைப்படுத்துதல் ஆகியவற்றில் இருந்துவரும் குறைபாடுகள் காரணமாக பெரும்போகத்திற்கான உரமானியத்திட்டத்தை வெற்றிகரமாக அமுல்செய்ய முடியவில்லையென்று கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

இவ்வாறு பெரும்போகத்தின் போது அறிமுகம் செய்யப்பட்டதாகக் கூறப்படும் மானிய அடிப்படையிலான உர விநியோகத்தின் மூலம் தங்களுக்கு போதியளவு உரம் கிடைக்கவில்லையெனவும் இத்திட்டம் தொடர்பாக முன்கூட்டியே தங்களுக்கு விளக்கமளிக்கப்பட்டிருந்தால் கூடுதல் நன்மை பெற்றிருக்க முடிந்திருக்குமெனவும் விவசாயிகள் தெரிவித்தனர். (க-7)

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கொமர்ஷல் வங்கியின் சாவகச்சேரி கிளை நாளை காலை 10.20 மணிக்கு இல.7 கண்டிவீதி சாவகச்சேரியிலும், எதிர்வரும் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இல.62/6 ஸ்ரான்லி வீதியிலும் வாடிக்கையாளர் சேவை நிலையத்தையும் திறந்து வைக்கவுள்ளது. (த-132,133)

# நெல்சன் மண்டேலா

த. பாண்டியன்

## மீள்பார்வை 6

### தந்தையின் மறைவு!



அன்றிலிருந்து ஏழு நாட்களுக்கு அந்தக் குடிசையில் தான் இருக்கவேண்டுமாம்.இந்த நாட்களில்தான் எல்லா சேட்டைகளையும் இளைஞர்கள் செய்வது வழக்கமாம். இவருடன் இருந்த இளைஞர்கள், இவரையும் அழைத்துக் கொண்டுபோய் நள்ளிரவில் பக்கத்து தோட்டத்திலிருந்த ஒருவரின் பன்றியைத் திருடிக்கொண்டு வந்து வெட்டி சமைத்து சாப்பிட்டுவிட்டார்களாம். இளமையில் அது வேடிக்கையாக இருந்தது. இப்பொழுது நினைத்தால் வெட்கமாக இருக்கிறதென எழுதுகிறார் மண்டேலா.

*கல்லூரியில்...*

முகேஸ்வேனியில் படித்துவந்த மண்டேலா மூன்றாண்டுகளில் முடிக்கவேண்டிய படிப்பை இரண்டே வருடங்களில் முடித்துவிட்டார். இதற்கு என் புத்திக்கூர்மை காரணமல்ல. கடுமையாக விடாப்பிடியாக படித்ததுதான் காரணம் என்றார். இவர் ஐந்தாவது வகுப்பில் வெற்றிகரமாக தேறியதைப் பாராட்டக்கூடிய வகையில் அரசுப் பிரதிநிதி ஒரு ஆட்டை வெட்டி பெரும் விருந்து வைத்தார். இதையடுத்து கிளார்க்பெரி கல்லூரியில் கொண்டுபோய்ச் சேர்க்க ஏற்பாடாயிற்று. புதுக் காலணி வாங்கித் தரப்பட்டது. அது புதிதாக இருந்தும் இரவில் அதை மீண்டும் மீண்டும் துடைத்துக்கொண்டு இருந்தார். ரீஜண்ட் ஜோக் கிங்டாபா தன்னுடைய போர்டு வண்டியில் ஏற்றிக்கொண்டு கிளார்க்பெரியை நோக்கி விரைந் தார். இந்தக் கல்லூரியைக் கட்ட 1825 தெம்பு நாட்டு மன்னர் நுகுபெங்குகாவால் நிலம் தானமாக வழங்கப்பட்டது. இது தெம்பு நாட்டு மக்களுக்கான பெரும் கல்லூரியாகத் திகழ்ந்து வந்தது. இதன் முதல்வராக பாதிரியார் காரிஸ் இருந்தார். மிகக் கண்டிப்பானவர். ஆனால் அவரை ஒரு 'தெம்பு வெள்ளையர் ' என்றும் தெம்பு மக்களின் மேம்பாட்டிற்காக பாடுபடுகிறவர் என்றும் ரீஜண்ட் சொல்லி வந்தார். தனக்குக் காட்டு கிற மரியாதையை அவருக் கும் காட்ட வேண்டுமென்றும் வலக்கை குடும்பத்தைச் சேர்ந்த சபாதா அங்கு தான் படிக் கிறார். அவர் தான் வரப்போகிற மன்னர்.

நீ நன்கு படித்து வந்தால் நீ தான் அவருக்கு ஆலோசகர் என்றும் அறிவுரை கூறினார். அவரது அறைக்குள் நுழைந்தபோது காரிஸ் பாதிரியார் ரீஜண்ட்டை மிகுந்த மரியாதையுடன் வரவேற்றார். மண்டேலா அறிமுகம் செய்யப்பட்டார். அவர் கைகுலுக்கினார் .ஒரு வெள்ளையரின் கையைப் பிடித்து குலுக்கியது அதுதான் முதல் தடவை என்கிறார் மண்டேலா. பெரிய கட்டடம் , நூலகம், ஆய்வுகூடம், தோட்டம்,மாடி என்று பிரமிக்க வைப் பதாக கல்லூரி இருந்தது. மண்டேலாவைச் சேர்த்தவுடன் இங்கு படிப்பதுடன் மாலையில் உடல் உழைக்கும் வேலையும் உண்டு என்பதைக் கூறினார் காரிஸ். நீ என் தோட்டத்தில் என்னுடன் வேலை செய்யலாம் என்றார். அந்தத் தோட்டத்தில் வேலை செய்தது மண்டே லாவுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. பாதிரியாரின் மனைவி மாலையில் சிறு பலகாரம் எதை யாவது நாள்தோறும் தந்துவந்தார். அவர் சிரித்துப் பேசுவார். ஆனால் பாதிரியார் அபூர் வமாகத் தான் பேசுவார். கல்லூரியில் கண்டிப்பான இராணுவத் தளபதி மாதிரி நடந்து கொள்ளும் காரிஸ் தோட்டத்தில் கருணையுள்ள மனிதராக மரங்கள், செடிகளை நேசிக்கும் மனிதராக காணப்பட்டார். இது மண்டேலாவைக் கவர்ந்தது.

இந்தக் கல்லூரியில் கெர்ட்ரூட் நித்லாபதி என்ற பெண் ஆசிரியை இருந்தார். அவர் தான் பீ.ஏ. பட்டம் பெற்ற முதல் ஆபிரிக்க பெண்மணி. பீ.ஏ. பட்டம் பெற்ற இன்னொரு ஆசிரியர் மாலசேலா இவர் தலைநிமிர்ந்து நடப்பவர். காரிஸுடனும் சமமாகத்தான் பழகுவார். எனவே இவர்கள் மீது மண்டேலாவுக்கு மரியாதை ஏற்பட்டது.

*மேற்படிப்புக்காக*

1937ஆம் ஆண்டில் மண்டேலாவுக்குச் சரியாக 19 வயதாக இருந்த போது ஹீல்டவுன் கல்லூரியில் மேல்படிப்புக்காக போய்ச்சேர்ந்தார். இது உம்டாடாவிலிருந்து நூற்றி எழுபத்தைந்தாவது மைல் தொலைவிலிருந்தது. இந்தக் கல்லூரியும் வெஸ்லியன் பிரிவு கிறிஸ்துவப் பாதிரியார்களால் நடத்தப்பட்டு வந்த புகழ்மிக்க கல்லூரியாகும். மாணவ மாணவியருக்கான தனித்தனி விடுதிகள் ,பெரிய விளையாட்டரங்கம் மாடிகளில் அமைந்திருந்த வகுப்பறைகள் எனக் கம்பீரமாகத் தோன்றியது. இங்கு படிப்பதே பெருமைக்குரியதாகத் தோன்றியது. இங்கு தெம்பு நாட்டைச் சேர்ந்த சோசா இனப் பிரிவு மாணவ மாணவியர் அதிக எண்ணிக்கையிலிருந்தாலும் பிற மாநில பிற இன மாணவர்களும் நிறையப் பேர் இருந்தனர்.

முகேஸ்வேனியிலிருந்தபோது மக்களும் சகமாணவர்களும் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதால் பணிவுடன் விலகி வழிவிட்டு வணங்குவதும் வழக்கமாக இருந்தது. மண்டேலாவுக்கு இங்கு யாரும் அதைக் கண்டு கொள்ளவில்லை. மாணவர்களுடன் எவ்வித வேறுபாடுமின்றி பழகவேண்டியிருந்தது. ஆனால் இங்கு சோசா இன மாணவர்கள் , சோசா மாணவர்களுடன் பேசிப்பழகுவார்கள். இதேபோலத் தான் பிற இனமாணவர்களும் இருந்தனர். இங்கேஆபிரிக்க மாணவர்கள் அவர்களுக்கு இடையில் உயர்வு தாழ்வு உணர்வைக் கைவிடவே இல்லை. அதுமட்டுமல்ல எல்லாக் கறுப்பு மாணவர்களும் கறுப்பு வெள்ளைக்காரனாக மாறி வாழவே கனவு கண்டார்கள். அதுதான் அவர்களது ஆசையாகவும் இலட்சியமாகவும் இருந்தது.

இங்கு விடுதியில் சுமாரான உணவுதான் பரிமாறப்பட்டது. வசதிபடைத்த சில மாணவர்கள் வெண்ணெயை சொந்தமாக வாங்கி வைத்துக்கொண்டு றொட்டியில் தடவிக் கொண்டனர். மண்டேலா றொட்டியை இனிப்பு நீரில் தோய்த்துச் சாப்பிட்டு வந்தார். வாரமொருமுறை மாமிச உணவு கிடைத்ததாம். மாணவர்களுக்கு உயிரியல் கற்றுத்தரும் ஆசிரியராக இளம் வயதினரான பிராங்க் லெபெண்டலே வந்துசேர்ந்தார். மாணவர்களை விட சில வருடங்கள்தான் மூத்தவர். இவர் மாணவர்களுடன் கால் பந்து விளையாட்டில் கலந்து கொண்டது மட்டுமல்ல சிறப்பாக விளையாடி எல்லோர் கவனத்தையும் ஈர்த்தார். இவர் சோதோ இனத்தவர். சோசா இனத்தைச் சேர்ந்த பெண்ணை மணந்து கொண்டார். இது மிகப் பெரிய ஆச்சரியம். இனத்தை விட்டு இன்னொரு இனப்பெண்ணை மணப்பது கற்பனை கூடச் செய்து பார்க்கமுடியாத காரியம்.

ஆனால் அவர் செய்தார். அவர்மீது மண்டேலாவுக்கு மரியாதை வளர்ந் தது. சோசா இனம் என மட்டும் நினைத்து வந்த மண்டேலாவின் மனம் இப்பொழுது ஆபிரிக்கா என்றும் எண்ணத் தொடங்கியது.ஆனால் இந்த உணர்வு அரும் பாகவே இருந்தது. (தொடரும்)

## துவக்கால சிந்தனை

"கடவுளே! தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும்"

உறவுகள் பலப்படுவது அன்பினால், உள்ளங்கள் பலப்படுவது துன்பங்களால், உறவுகள் பிரிகின்றன, உள்ளங்கள் உடைகின்றன. ஆனால் உறுதியான இலட்சியத்தை உடைய ஒருவன் தன்னை பின் வாங்கச் செய்யும் சிந்தனைகளை சீர்படுத்தி இருளின் பயத்தை நீக்கிக கதிரவனாய் எழுகிறான். வாழ்வின் நோக்கம் உணராதவன் நிம்மதி இழக்கிறான். வாழ்வின் நோக்கத்தை நினைப்பவன் மகிழ்ந்து கொண்டாடுகின்றான். இயேசுவும் தன் வாழ்வின் நோக்கத்தை உணர்ந்ததால் தன் மரணத்தை முழுமனதோடு வரவேற்கிறார். "கோதுமை மணி மண்ணில் வீழ்ந்து மடிந்தால் ஒழிய அது பலன் தராது" என்று அவரது மரணம் பலருக்கு வாழ்வைக் கொண்டுவருவதைக் குறிப்பிடுகிறார். துன்பத்தில் துவண்டு போகக் கூடிய வேளையிலும் "இந்த நோக்கத்திற்காக அல்லவா நான் வந்தேன" என்று தந்தையை மகிமைப் படுதத அவர் செய்ய இருக்கும் தியாகச் செயலைப்பற்றி கூறுகிறார். உடலில் சுமந்தால் தான் சுமையா? உள்ளத்தில் சுமந்தாலும அது சுமைதானே. இயேசு சிலுவையை சுமக்கும் முன் மனதில் சுமந்த சுமைகள் பளுவானதாக இருந்திருக்கலாம். ஆனால் இலட்சியம் கூர்மையானதால், அது சுகமான சுமையாகியது. நாமும் அன்றாட வாழ்வில் சுமப்பதற்காகவே பிறந்தவர்கள் போல, எத்தனை எத்தனையோ துன்பங்களை சுமக்கிறோம். சுமைகளால் அழுத்தப்படுகிறோம். என்றாவது ஒருநாள் நான் ஏன் இதை சுமக்கிறேன்? யாருக்காக சுமக்கிறேன் என்று ஒரு நிமிடம் சிந்திப்போமாகில் ,என்றோ நமது சுமைகளை மறந்து மற்றவர்களின் சுமை தாங்கியாக மாறி இருப்போம் அன்றோ!

காவலன்



சாவகச்சேரி லயன்ஸ் கழக ஏற்பாட்டில் சாவகச்சேரி அம்பிகா மருந்தகத்தில் ஆரம்பிக்கப்பட்ட நீரிழிவு தகவல் மையத்தின் கணனி யை லயன் நிமால் ராஜபக்ஷ சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்த போது எடுக்கப்பட்ட படம். நீரிழிவுத் திட்டத்தின் மாவட்டத் தலைவர் லயன் டாக்டர். எஸ்.எஸ். அருளானந்தம், லயன் க.சற்குணதேவன் உட்பட வேறும் பலர் இந்நிகழ்வில் பங்கு கொண்டிருந்தனர். (படம்:-தென்மராட்சி நிருபர்)

## அதிசயம் ஆனால் உண்மை

(கொழும்பு)

இரட்டைக்குழந்தைகள் பிறந்து இரு மாதமேயான குழந்தை யொன்றின் வயிற்றிலிருந்து இரட்டைக் குழந்தைகளை டாக்டர்கள் சத்திரசிகிச்சை மூலம் வெளியே எடுத்துள்ளனர்.

இந்த அபூர்வ சம்பவம் பாகிஸ்தானில் இடம்பெற்றுள்ளது. பாகிஸ்தானில் இரு மாதங்களுக்கு முன்னர் பெண்ணொருவர் பெண் குழந்தையொன்றை பிரசவித்தார். குழந்தைக்கு நஷியா என பெயரிடப்பட்டது. குழந்தையின் தாய் அபோட்டபாத் என்னும் பகுதியைச் சேர்ந்தவர். இருமாதக் குழந்தையான நஷியா மூச்சுத்திணறலிலும் இதர உபாதைகளாலும் அவதிப்பட்டார். இதனையடுத்து பாகிஸ்தான் தலைநகரான இஸ்லாமாபாத்திலுள்ள மருத்துவக் கல்லூரி யின் குழந்தைகள் நலப் பிரிவில் நஷியா சேர்க்கப்பட்டார்.

குழந்தை யை பரிசோதித்த டாக்ட்ர்கள் குழந் தையின் வயிற்றுக்குள் இரு சிசுக்கள் இருப்பதைக் கண்டு பிடித்துள்னர். வயிற்றிலிருந்த இந்த இரட்டைக் குழந்தைகளை சத்திர சிகிச்சை மூலம் டாக்டர்கள் வெளியே எடுத்துள்ளனர்.

சத்திரசிகிச்சை இருமணித்தியாலங்கள் நீடித்தது. ஒரு சிசுவுக்கு ஒரு தலையும் நான்கு அவயவங்களும் இருந்தன. மற்றைய சிசுவுக்கு முள்ளந் தண்டு, சில உறுப்புக்கள், கைகள், எலும்புகள், ஈரல், மணிக்குடல் ஆகியவை இருந்தன.

இதுகுறித்து டாக்டர்கள் விளக்குகையில், நஷியாவின் தாயின் வயிற்றில் மூன்று கருக்கள் உருவாகியுள்ளன. இவை முறையாக வளர்ச்சி பெற்றிருந்தால் மூன்று குழந்தைகளாக இருந்தி ருக்கும்.

ஆனால் அவ்வாறில்லாமல் கரு வளர்ச்சியடைய ஆரம்பித்த சில மாதங்களில் இரு கருக்கள் மூன்றாவது கருவினுள் நுழைந்து வளர ஆரம்பித்துள்ளன.

இந்நிலையில் 4 மாத வளர்ச்சியின்பின்னர் மூன் றாவது கருவிலிருந்த இரு கருக்களும் அழிவடைந்துள்ளன. இதனாலேயே நஷியாவின் வயிற்றில் அழிவடைந்த இரட்டைக் குழந் தைகள் இருந்துள்ளன என்று கூறி யுள்ளனர்.

ஒரு கருவுக்குள் வேறுகரு அல்லது கருக்கள் வளர்வது மிகவும் அபூர்வம் இலட்சக்கணக்கான பிரசவங்களில் ஒன்று தான் இப்படி அமையு மென்று டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். சத்திரசிகிச்சையின் பின்னர் நஷியா மேற்படி மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப்பிரிவில் வைக்கப்பட்டுள்ளார். (க)

## அடிக்கல் நாட்டு விழா

(காரைநகர்)

காரைநகர் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான தேர்த் தரிப்பிடங்கள் பல இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டு விழா நாளை திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆலய உற்சவ காலங்களில் பஞ்சரத பவனி இடம்பெறுகின்ற போதிலும், இரு தேர்களை நிறுத்துவதற்கு ஏற்றதாக பாரியளவில் தேர்த்தரிப்பிடம் அமைக்கப்படவுள்ளது. (த-246)

## சைக்கிள் உரிமத்தகடு

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை நகர சபையில் சைக்கிள் உரிமத்தகடுகள் விநியோகிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-52)

## தீர்வுகாணப்படவேண்டிய

# முஸ்லிம் தனித்தரப்பு விவகாரம்

இலங்கை இனப்பிரச்சினையில் முஸ்லிம்களது பிரச்சினை ஒரு முக்கிய இடத்தைப்பிடித்து வருவதை காணக்கூடியதாக உள்ளது.

வடகிழக்கு போராட்டத்தின் ஆரம்ப காலகட்டங்களில் போராட்ட குழுக்களுடன் முஸ்லிம்களும் இணைந்தே செயற்பட்டிருந்தனர். எனினும், 80களின் இறுதியில் தமிழ் போராட்டக் குழுக்களின் மீது பல முஸ்லிம்கள் அதிருப்தி கொண்டவர்களாக நிலமை மாறியது.

இதற்கு அன்றைய ஆட்சியாளர்களது பிரித்தாளும் தந்திரமே காரணமென தமிழ்தரப்புகள் குற்றஞ்சாட்டின. தமிழ்த் தரப்புகளின் தவறான நடத்தையே காரணமென முஸ்லிம்கள் குற்றஞ்சுமத்தினர்.

எவ்வாறெனினும் உக்கிரம் பெற்ற யுத்தத்தின் காரணமாக தமிழ் மக்களைப் போலவே வடகிழக்கு முஸ்லிம் மக்களும் இழப்புகளை சந்தித்தனர்.

விசேடமாக கிழக்கில் ஏற்பட்ட தமிழ் முஸ்லிம் கலவரங்களின் தொடர்ச்சியாக தமிழ் மக்களைப் போலவே ஆயுததாரிகளால் முஸ்லிம்களும் படுகொலை செய்யப்பட்டனர். பலர் அகதிகளாக இடம்பெயர நேரிட்டது.

இந்த நிலையில் 1990ல் வடபகுதி முஸ்லிம்கள் ஒட்டுமொத்தமாக விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்டனர். அவர்கள் புத்தளம் போன்ற பகுதிகளில் எவ்வித அடிப்படைவசதிகளும் இல்லாத நிலையில் அகதிகளாக வாழ நிர்ப்பந்திக்கப்பட்டனர். இதனை ஒரு இன சுத்திகரிப்பாகவே அம்மக்கள் பார்க்கின்றனர்.



இவ்வாறான பின்புலத்தில் 2002ம் ஆண்டு ஒப்பமிடப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கை தொடர்பிலும் பல அதிருப்திகளை முஸ்லிம் சமூகம் தெரிவித்திருந்தது.

அதேபோல வடகிழக்கில் சுனாமி மீள்கட்டுமான் பணிகளுக்காக உருவாக்க முயற்சிக்கப்பட்ட பொதுகட்டமைப்பிலும் முஸ்லிம்கள் தொடர்பில் உரிய அவதானம் செலுத்தப்படவில்லையென்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.

இவ்வாறான சூழலில் போர்நிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்துவது தொடர்பில் ஜெனீவாவில் இடம்பெற்ற பேச்சுக்களில் முஸ்லிம்கள் தாம் தனித்தரப்பாக அனுமதிக்கப்பட வேண்டுமென்று கோரியிருந்தனர்.

அது சாத்தியப்படாத நிலையில் தற்போது பல முஸ்லிம் அமைப்புகளும் கட்சிகளும் இனிவரும் பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக இணைத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று வலியுறுத்தி வருகின்றன.

இதேவேளை பேச்சில் முஸ்லிம்கள் தனித் தரப்பாக இடம் பெற்றால் அவர்கள் அரசசார்பாக செயற்படுவர் இதனால் அதிகாரசமநிலை பாதிக்கப்படும் என்ற சில தமிழ்த்தரப்புகளின் பயம்,

அதே போல இதே தனித்தரப்பு விவகாரத்தை தமிழ் முஸ்லிம் தரப்புகளுக் கிடையேயான மோதலாக மாற்றுவதற்கு முயற்சிக்கின்ற அரச செயற்பாடுகள், மற்றும் இது குறித்து [illegible]ாக முஸ்லிம் தரப்புடன் கலந்து பேசி தீர்வொன்றினைக் காண முயற்சிக்காத விடுதலைப்புலிகளின் அரசியல் தூரநோக்கற்ற செயற்பாடு மற்றும் இதனை விவாதமாக்கி வீரவசனம் பேசி பிழைக்கின்ற சுயநலவாத முஸ்லிம் அரசியல்வாதிகளின் செயற்பாடு போன்றவை இங்கு கவனத்தில் கொள்ளப்படவேண்டிய விடயங்களாகும்.

எவ்வாறெனினும் இப்பிரச்சினை மேலும் மேலும் பெருப்பிக்கப்பட்டு மோசமான அரசியல் குழப்ப நிலை தேன்றுவதற்கு முன்னர் சகல தரப்புகளும் இதயசுத்தியுடன், விட்டுக்கொடுப்புடன் செயற்பட்டு இப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டியது மிகவும் அவசியமாகும். முஸ்லிம்களின் தனிதரப்பு உட்பட சகல அபிலாசைகளும் பேச்சுக்களில் நியாயமான முறையில் உள்வாங்கப்பட வேண்டும். இதற்கு சகல தரப்புக்களும் இதய சுத்தியுடனும் விட்டுக்கொடுப்புடனும் செயற்பட வேண்டிய தேவை எழுந்துள்ளது.

– சுயாதீனன்

## இனியொரு விதி செய்வோம்

மானுடனே அறிவீர் - மலை
மானுடனே அறிவீர்
நிலம் மீட்கும் காலமிது
நீயறிவீர்

மேல் கொத்மலை எனச் சொல்லி
எமை மேய்த்திடவே பார்க்கிறான்
நம்
இனச்செறிவை
தேய்த்திடவே பார்க்கிறான்

கொத்மலை எனும் பெயரில்
கொடுங்கோலன் வருகிறான் - நாம்
கொண்ட நிலம் அத்தனையும்
குழி பறித்து
குகை தோண்டி
தண்ணீரில் அனுப்புதல் போல்
நம்மினத்தைத்
தாழ்த்திடத்தான் பார்க்கிறான்

வெளிச்சம் தருவோம் என்று எம்மை
வெளியேறச் சொல்கிறான்
வீடு தருவோமென்று எம்மை
விலகி நிற்கச் சொல்கிறான்
காணி தருவோமென்று
கைகழுவப்பார்க்கிறான்
கரு(த்)திட்டம் போட்டு எம்மைக்
காடனுப்பப் பார்க்கிறான் - சுடு
காடனுப்பப் பார்க்கிறான்

ஜப்பானின் உதவியோடு எம்மண்ணை
சொப்பனக்காடாக்கி அவன்
சொந்தக்காரனுக்கு
செப்பனிடப்பார்க்கிறான் -
சொர்க்கமாய்
செப்பனிடப்பார்க்கிறான்

இந்த சர்காரின் நாடகத்தில்
எம் தலைவன் எம்மையெல்லாம்
கோமாளி வேஷம் கொண்டு
கொடுத்திடத்தான் பார்க்கிறான் - பலி
கொடுத்திடத்தான் பார்க்கிறான்

நாம் போற்றும் நிலமாயும்
போராட்டக் களமாயும் - எம்மை
மாற்றும் நிலமாயும்
எதிர்காலத்தில்
மார்பு தட்டி எதிரியை
ஓட்டும் நிலமாயும்
கொண்டதுதான்
எங்கள் நிலம்
மாற்றிடுவோம் இவ் யுகத்தை
காத்திடுவோம் எம் நிலத்தை
இழிநிலைத் தலைவர்களை
இகழ்ந்திடுவோம்
இன்று முதல்
பகை வந்து சேர்ந்தாலென்ன
எம்முயிர்க்கு பாசக்கயிறு வந்து சேர்ந்தாலென்ன
இனியொரு விதி செய்வோம்

இழிநிலை தலைமை தம்மை
இழிவுரச்செய்வோம்
இளைஞர் பலம் சேர்த்திடுவோம்
மலையகம் எனும் தேசம்
மலரும் வரை உயிர் கொடுப்போம்
தவறவே விடமாட்டோம்
தாயகமாய் மாற்றிடுவோம்.

– மலைமகன்

## கண்டது.. கேட்டது.. படித்தது..

### திம்புப் பேச்சுவார்த்தைகள் - 1985

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வை காணும் குறிக்கோளுடன் 1985 இல் அனைத்து தமிழ் அரசியற் கட்சிகளின் பங்களிப்புடன் பூட்டான் நாட்டின் திம்பு நகரத்தில் இலங்கை அரசாங்க பிரதி நிதிகளுடன் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றன. இப்பேச்சுவார்த்தைகளில் EPRLF, EROS, LTTE, PLOTE, TELO, மற்றும் TULF ஆகிய தமிழ் கட்சிகளின் பிரதி நிதிகள் பங்கு பற்றினர்.

#### திம்புப் பேச்சுவார்த்தைகளின் போது தமிழ் அரசியற் கட்சிகள் முன்வைத்த கோரிக்கைகள்

1. தமிழ் மக்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகள் உறுதிப்படுத்தப்படும் வகையில் அவர்களை ஓர் தேசிய இனமாக ஏற்றுக்கொள்ளல்
2. தமிழர் மரபுவழித்தாயகக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளல்.
3. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளல்.
4. இலங்கையை தமது தாய்நாடாக ஏற்றுக் கொள்ளும் அனைவரதும் பிரஜா உரிமையையும் ஏற்றுக்கொள்ளல்.
5. தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை ஏற்றுக்கொள்ளல்.

திம்புப்பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றிய தமிழ் ஆயுதக்குழுவினர் பேச்சுவார்த்தைகளில் பங்கு பற்றிய போதிலும் திம்புக்கொள்கைகள் பற்றி ஆழமானதும் தீவிரமானதுமான கலந்துரையாடலை அவர்கள் மத்தியில் முன்கூட்டியே ஒழுங்குபடுத்தவில்லை. பேச்சுவார்த்தைக்கு தேவையான நிகழ்ச்சி நிரலை மாத்திரம் அவர்கள் சமர்ப்பித்தனர். இந்நிகழ்ச்சி நிரலின் யோசனைகளை ஆழமாக கவனத்தில் எடுத்துக்கொள்ள அன்றைய ஜே. ஆர். ஜயவர்த்தனவின் தலைமையின் கீழான ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் த்யாராக இருக்கவில்லை.

ஐக்கிய அரசின் கீழ் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளல், தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரித்தல் மற்றும் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களை மரபுவழித்தாயகமாக ஏற்றுக் கொள்ளல் போன்ற பிரேரணைகள் இப்பேச்சுவார்த்தைகளுக்கு அடிப்படையாக அமைந்தன. இவை திம்பு யோசனைகள் என பகிரங்கப்படுத்தப்பட்டன. திம்பு யோசனைகள் நிகழ்காலத்திற்கு எவ்வகையில் ஏற்புடையதாகும் என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

இலங்கையில் சமஷ்டி எண்ணக் கருவின் தோற்றமும் வளர்ச்சியும் (1926-2005) எனும் புத்தகத்திலிருந்து பெறப்பட்டது

## அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்

உறுப்புரை - 23

1. ஒவ்வொருவரும் தொழில் செய்வதற்கும், அத்தொழிலினைச் சுதந்திரமான முறையில் தேர்ந்தெடுத்துக்கொள்வதற்கும், செய்யுந் தொழிலில் நியாயமானதும் அனுகூலமுடையதுமான தொழில் நிபந்தனைகளுக்கு உரியோராயிருப்பதற்கும், தொழிலின்மைக்கெதிரான பாதுகாப்பினைப் பெற்றுக் கொள்வதற்கும் உரிமை உடையவர் ஆவர்.
2. ஒவ்வொருவரும் வேறுபாடெதுவுமின்றி, சமமான தொழிக்குச் சமமான சம்பளம் பெறுவதற்கும் உரித்துடையவராவர்.

## கருத்தாடல் களம்

### சம உரிமையே மனித உரிமை

இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு ஜிஹாத் என்ற ஒரு அமைப்பு இருப்பதாக உலகரீதியில் ஜெனீவா பேச்சுவார்த்தையின் போது புலிகளின் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் கூறிய கருத்து மிகவும் வேதனைக்குரியதாகும். முஸ்லிம்களும் தமிழர்களும் தனித்து வாழும் கிராமங்கள் இருப்பது போல இரு இனத்தவர்களும் சேர்ந்து வாழும் பிரதேசங்களும் இருக்கத்தான் செய்கின்றன. இப்படி வாழும் மக்களுடைய உள்ளத்தில் தப்பான கருத்துக்களையும் ஒருவரை ஒருவர் வெறுக்கும் நடவடிக்கைகளையும் உண்டு பண்ணாது இரு சமூகத்தில் உள்ள தலைவர்களும் ஒன்று சேர்ந்து உரிமைகளை சமமாக வழங்கி நாட்டில் ஐக்கியத்துடனும், சந்தோஷத்துடனும் மக்கள் வாழ வழிசமைக்க வேண்டும்.

மௌலவி ஈ. எல். றியாஸ்
மீரோவோடை

### எங்களை வாழ விடுங்கள்

கிழக்கு தமிழரான நாம் இந்த ஆயுத குழுக்களால் மிக மோசமான பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளோம். ஆயுதக்குழு இல்லை என்கிறார்கள். அப்படியென்றால் இங்கு கொலைகளை செய்வது யார்? கடத்துவது யார்? கலவரங்களை உருவாக்குவது யார்? எனவே இந்த பொய் பிரசாரங்களை கைவிட்டு மக்களை ஏமாற்றாமல் சமாதானத்திற்காக பாடுபட சம்பந்தப்பட்ட தலைவர்கள் முன்வர வேண்டும். தயவு செய்து எங்களை வாழவிடுங்கள்.

பா. கிருஷ்ணமூர்த்தி
கல்லடி, மட்டக்களப்பு

## இவ்வார விழிப்பில்...

- சமகால அரசியல்
- ஹிக்கடுவையின் இன்றைய நிலை
- சுனாமியும் மக்களும்
- காட்சிக்கோவை
- இழப்பும் தேவையும்

ரீ.என்.எல் - செவ்வாய் இரவு 7.25 மணிக்கு

## வாசகர் கவனத்திற்கு...

கருத்தாடல் களத்திற்கு உங்கள் கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன.

அத்தோடு விழிப்பின் பதிவுகள் தொடர்பான உங்கள் அபிப்பிராயங்களையும் விமர்சனங்களையும் நாங்கள் எதிர் பார்க்கிறோம்.

எழுதி அனுப்ப வேண்டிய முகவரி

விழிப்பின் பதிவுகள்
யங் ஏசியா டெலிவிஷன்
இல, 713. டிபி. விஜயசிங்க மாவத்தை,
பெலவத்தை, பத்தரமுல்லை.

மின்னஞ்சல் முகவரி :- villippu@yatv.net

## சமாதான செய்திகள்



கொழும்பு முகத்துவாரத்தில் அமைந்துள்ள 'சகலருக்கும் உதவி' எனும் அமைப்பானது யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் உட்பட நாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கு தையல் பயிற்சியினை வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். தற்போது 35 இளைஞர் யுவதிகளுக்கு தையல் பயிற்சிகளை வழங்கிக் கொண்டிருக்கும் இந்நிறுவனம் அவர்களின் திறன்களை விருத்தி செய்யும் நோக்கில் கடந்த 2006 பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி பயிற்சி யொன்றினை ஏற்பாடு செய்திருந்தது. இதில் இந்திய திரைப்பட இயக்குனரும், யுனிசெப் நிறுவனத்தின் பிரதிநிதியுமான மகேஷ் பகாட் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டார். அத்தோடு ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தினால் அச்சிடப்பட்ட புத்தகங்களும் இந்நிகழ்வில் வழங்கப்பட்டது.




விழிப்பு நிகழ்ச்சி TNL அலைவரிசையில் செவ்வாய் தோறும் இரவு 7.25 மணிக்கும், ரூபவாஹினி 'ஐ'அலைவரிசையில் திங்கள் தோறும் இரவு 7.30 மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை.
தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

பக்க வடிவமைப்பு (கணனி) – சிற்றம்பலம் கணேசன்

# யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென
# 2 லட்சத்து 40 ஆயிரம் வீடுகள்
# கொண்ட ஜனாதிபதி கிராமம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில்யுத்தத்தினால்பாதிக்கப்பட்ட மக்களுக்கு 2 இலட்சத்து 40 ஆயிரம் வீடுகளைக்கொண்ட ஜனாதிபதி கிராமம் ஒன்றை அமைக்க அரசாங்கம் முடிபு செய்துள்ளது.

ஜனாதிபதி நிதியத்தின் மூலமே இந்தக் கிராமம் அமைக்கப்படவுள்ளது. ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் வடக்கு-கிழக்கு யுத்த பாதிப்பு பிரதேசங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முக்கிய பேச்சுவார்த்தையிலேயே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினதும், சர்வதேச அமைப்புகளினதும் நிதியுதவியுடன் இத்திட்டம் துரிதமாக முன்னெடுக்கப்படவுள்ளதுடன் நிர்மாண நடவடிக்கைகளுக்கான திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி நிதியத்திலிருந்து இதற்கான நிதியைப்பெற்றுக்கொள்ளதீர்மானிக்கப்பட்டுள்ளது. வடக்குகிழக்கு அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. வடக்குகிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள் , பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்ட இக்கலந்துரையாடலின் போது மேற்படி விடயம் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. கடந்த காலம் யுத்தத்தின் போது மரணமடைந்தவர்கள் மற்றும் இடம்பெயர்ந்துள்ளவர்களின் குடும்பங்களுக்கே இவ்வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இத்திட்டத்திற்கென உலக வங்கி, ஐரோப்பிய சங்கம் மற்றும் சர்வதேச நிறுவனங்களின் உதவிகளும் பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

ஜனாதிபதி நிதியத்தில் இருந்து பெறப்படவுள்ள நிதியிலிருந்து ஜனாதிபதி கிராமம் எனும் வீடமைப்புத்திட்டம் ஒன்றை அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கில் பிரதேச வீதி அபிவிருத்தி, நெடுஞ்சாலை அபிவிருத்தி ,குடிநீர் திட்டங்கள் உட்பட பல்வேறு நடவடிக்கைகளை துரிதமாக ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அவ்வப் பிரதேச மக்களின் கருத்துக்கள், ஆலோசனைகளை பெற்றே இத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. (த-9)

## புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டமனு விசாரணைக்கு

(கொழும்பு)

நான்கு வருடங்களுக்கு முன்னர் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவை மேல்முறையீட்டு நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவுள்ளது.

இந்த மனுமீதான விசாரணைகள் எதிர்வரும் மே மாதம் 24ஆம் திகதி நடத்தப்படவுள்ளது.

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் செய்து கொண்ட இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செல்லுபடியற்றது என உத்தரவுவிடுமாறு கோரி ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் இந்த மனுவை தாக்கல் செய்திருந்தன.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மற்றும் தற்போதைய அமைச்சரவையும் இந்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் உட்பட பிரதிவாதிகள் அனைவருக்கும் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் சட்டத்திற்கு முரணானது என்று மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர். (க-9)

## பரு.வைத்தியசாலைக்கு
## பிரேத குளிரூட்டி இயந்திரம் பொருத்தும் பணி பூர்த்தி

(துன்னாலை)

இந்திய அரசினால் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட, பிரேதங்களை பாதுகாக்கும் குளிரூட்டி இயந்திரம் பொருத்தும் பணி கடந்த ஞாயிற்றுக்கிழமை நிறைவடைந்துள்ளது.

நான்கு சடலங்களை பாதுகாத்து வைக்கக்கூடிய மேற்படி குளிரூட்டும் மின் தன்னியக்க இயந்திரத்தை இந்தியாவிலிருந்து வருகை தந்த தொழில்நுட்பவியலாளரான வர்கீஸ் என்பவர் பொருத்தியுள்ளார்.

அத்துடன் செயற்கை சுவாசம் அளிக்கும் இயந்திரம் மற்றும் குறைமாத குழந்தைகளை பாதுகாக்கும் கண்ணாடி பெட்டி என்பனவும் மேற்படி தொழில்நுட்பவியலாளரால் பொருத்தப்பட்டுள்ளன.

மேற்படி பிரேத குளிரூட்டி இதுவரை காலமும் இல்லாத காரணத்தால் வைத்தியசாலையில் மரணமடைவோரின் சடலங்களை பாதுகாத்து வைக்கும் பொருட்டு யாழ்.போதான வைத்தியசாலைக்கு அனுப்பவேண்டியிருந்ததாகவும் இதனால் வீண் செலவினங்களும் ஏற்பட்டுவந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-101)

## மதுபோதையில் மோட்டார்சைக்கிள் செலுத்தியவருக்கு அபராதம் விதிப்பு

மதுபோதையில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திய நபர் ஒருவரை பருத்தித்துறைப் பொலிஸார் குடத்தனைப் பகுதியில் வைத்து வழிமறித்த போது குறித்த நபர் மதுபோதையில் இருந்ததுடன் மோட்டார் சைக்கிள் செலுத்துவதற்கான ஆவணங்கள் இல்லாமல் இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த நபரை கைது செய்த பொலிஸார் அவரை கடந்த வியாழக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தியவேளை குறித்த நபருக்கு எதிராக நான்கு குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டன.

இந் நபர் மிருசுவில் கொடிகாமத்தைச் சேர்ந்த முருகேசு பாலேந்திரன் என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்ட நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டவராவார்.

முதலாவது குற்றமான சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி வாகனத்தைச் செலுத்தியமைக்கு 2 ஆயிரத்து 500 ரூபாவும் இரண்டாவது குற்றமான வருமான வரிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாத காரணத்திற்கு ஆயிரம் ரூபாவும் மூன்றாவது குற்றமான காப்புறுதி பத்திரமின்றிச் செலுத்தியமைக்காக 2 ஆயிரத்து 500 ரூபாவும் நான்காவது குற்றமாக மதுபோதையில் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றதற்காக 5 ஆயிரம் ரூபாவுமாக மொத்தம் 11 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு க.அரியநாயகம் தீர்ப்பளித்தார். (க.101)

## புனரமைப்பு அற்ற நிலையில் மைதானம்

சாவகச்சேரி நகர சபையின் நிர்வாகத்திற்குட்பட்டிருக்கும் சாவகச்சேரி பொது விளையாட்டு மைதானம் உரிய முறையில் புனரமைக்கப்படாமல் இருப்பதன் காரணமாக விளையாட்டு ஆர்வலர்களால் குறித்த மைதானத்தைப் பயன்படுத்த முடியாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நகரின் மையப்பகுதியில் அமைத்துள்ள இப் பொதுவிளையாட்டு மைதானம் இராணுவ முகாமை அண்டிய பகுதியில் இருப்பதால் விளையாட்டு ஆர்வலர்கள் அங்கு சுதந்திரமாகச்சென்று விளையாட்டுப்பயிற்சிகளை மேற்கொள்ள முடியாமல் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதேசமயம் இவ்விளையாட்டுமைதானத்தை நகர சபை உரிய முறையில் புனரமைப்புச் செய்து தரும் பட்சத்தில் பிரதேச மட்டவிளையாட்டுப்போட்டிகளை இங்கு நடத்தக்கூடியதாக இருக்கும் என தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிற்கான விளையாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (த-16)

## சைக்கிள் ஓட்டப்போட்டி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச விழிப்புணர்வு வாரத்தையொட்டி யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனம் ,யாழ்.மாவட்ட மிதிவெடிசெயற்பாட்டு அலுவலகத்துடன் இணைந்து மிதி வெடியால் பாதிக்கப்பட்டு செயற்கை அவயவம் பொருத்திய வலுவிழந்தோருக்கான சைக்கிள் ஓட்டப்போட்டிஒன்றைநடத்தவுள்ளது.

இந் நிகழ்வு இன்று காலை 8மணிக்கு ஜெய்ப்பூர் நிறுவன முன்றலில் இருந்து ஆரம்பமாகும். இந் நிகழ்வில் அலுவலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு ஜெய்ப்பூர் நிறுவனத்தின் நிர்வாக செயலாளர் என்.சிவநாதன் கேட்டுள்ளார். (க)

## சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிரதேசத்தில் இராணுவத்தினரால் சுவீகரிக்கப்பட்ட காணிகள்குறித்து இதுவரையும் யாழ்.மாவட்ட செயலகத்தில் பதிவு செய்யாத பொதுமக்களை எதிர்வரும் 19 ஆம் திகதி யாழ்.மாவட்ட செயலக்த்திற்கு வந்து யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியைச் சந்திக்குமாறும் அத் திகதியில் சந்திக்க வருபவர்கள் 10 திகதிக்கு முன்னதாக தமக்கு முன்னறிவித்தல் தரும்படியும் யாழ். செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (க.132.133)

## புதிதாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள
## 21 பிரதேச சபைகளையும் இயக்க அங்கீகாரம் அளிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைகளின் கீழ், மக்களுக்கு வழங்கும் சேவைகளை விரிவுபடுத்தும் நோக்கில் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள பிரதேச சபைகள் தற்போது இயங்கத் தொடங்கியுள்ளதாக உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஜெனக பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இப் புதிய பிரதேச சபைகளுக்கு இயங்குவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

எனினும் சில சிக்கல் நிலைமைகளை கருத்தில் கொண்டு சில பிரதேச சபைகள் இன்னும் செயற்பாடுகளை ஆரம்பிக்கவில்லை. இச் சபைகள் தமது நடவடிக்கைகளை ஒரு சில வாரங்களுக்குள் ஆரம்பிக்கும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் இதுவரை காலமும் இயங்கி வந்த பிரதேச சபைகளுக்கு மேலதிகமாக 21 புதிய பிரதேச சபைகளை உருவாக்கி மக் களுக்கான சேவையினை இலகுவாகப் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன் அடிப்படையிலேயே இப் புதிய பிரதேசபைகள் உருவாக்கப்பட்டுள்ளன. (க)

## தியான பயிற்சி வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் இந்து மன்ற ஆதரவுடன் சிவலிங்க யோகேந்திரா நிலையத்தினர் தியானப் பயிற்சி வகுப்புக்களை நடாத்தவுள்ளனர்.

இவ் வகுப்புக்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பமாகும். சாவகச்சேரி வீதி மட்டுவிலில் உள்ள இந்து மன்றத்தால் இவ் வகுப்புக்கள் நடைபெறும்.

இவ் வகுப்புக்களில் கலந்து கொண்டு பயிற்சியை பூர்த்தி செய்பவர்களுக்கு சிவலிங்க யோகேந்திரா நிலையத்தால் சான்றிதழ்கள் வழங்கப்படும். (க-7)

அளவு மீறிய தற்செருக்குத்தான் உண்மையில் அவர்களின் தவறான செயல்கள் அனைத்திற்கும் மூல காரணமாய் இருக்கின்றது. சுய பற்றுதல் நீங்க வேண்டும்.

-பிளேட்டோ

# வலம்புரி

## சமாதானத்தை வலியுறுத்தும் உள்ளூராட்சித் தேர்தல் முடிபுகள்

நடந்து முடிந்த உள்ளூராட்சிசபைத் தேர்தல் முடிபுகள் ஆட்சியாளர்களுக்கும், சர்வதேச சமூகத்தினருக்கும் ஓர் உண்மையைத் தெளிவுபடுத்தியுளன்ளது.

அதாவது சமாதானத்திற்கு எதிரானவர்களை- இனவாதம் கக்குபவர்களை நாங்கள் ஆதரிக்கவில்லை. நீங்கள் உடனடியாக பேச்சுவார்த்தையை முன்னெடுத்து சமாதானத்தை நிலைநாட்டுங்கள். இதுவே மக்களின் தீர்ப்பாகும்.

விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் கீழ் புறக்கி எடுத்து எண்ணிய வாக்குகளின் அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை பெற்றுவிட்டு, நாங்களே இந்த நாட்டை வழிப்படுத்துகின்றோம் என்ற நினைப்புடன் இருந்த ஜே.வி.பிக்கும், ஜாதிக ஹெலஉறுமயவுக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மக்கள் தகுந்த பாடம் புகட்டியுள்ளனர்.

இலங்கை ஓர் பௌத்த சிங்கள நாடு. பௌத்தைத்தையும் சிங்களத்தையும் காப்பாற்ற பிறவி எடுத்தவர்கள்தான் நாம் என்ற இறுமாப்புக் கொண்ட பௌத்த தேரர்களின் அமைப்பான ஜாதிக ஹெலஉறுமயவால் மருந்துக்கேனும் சபை எதையும் கைப்பற்ற முடியாமல் போயிற்று.

ஐயா! வடக்குக் கிழக்கில் உள்ள நாற்பதாயிரம் படையினரின் சடலங்களை கொழும்புக்கு அனுப்பினால் நான்கு லட்சம் தமிழர்களின் சடலங்களை வன்னிக்கு அனுப்புவோம் என ஜாதி ஹெலஉறுமயவைச் சேர்ந்த பிரகிருதி ஒன்று ஒப்பாரி வைத்தது.

எனினும்அதனால் ஒரு சபையைத் தனிலும் தக்க வைக்க முடியாமல் போயிற்று. இதற்கான காரணம் என்ன? இது பற்றி சர்வதேச சமூகம் ஒரு கணம் சிந்திக்க வேண்டும்.

சிங்கள மக்களைப் பொறுத்த வரை அவர்கள் சமாதானத்தை விரும்புகின்றனர். 1983 களில் சிங்கள மக்களிடம் இருந்த மன நிலை தற்போது இல்லை.

அவர்கள் தமிழ் மக்களின் நியாயமான உரிமையை ஆதரிக்கின்றார்கள். ஜே.வி.பி., ஜாதிக ஹெலஉறுமய போன்ற அரசியல் கட்சிகள் மனித உயிரிழப்பில் அரசியல் பிழைப்பு நடத்தும் அபத்தவாதிகள் என்பதை சிங்கள மக்கள் தெட்டத்தெளிவாக புரிந்துள்ளார்கள்.

அதன் வெளிப்பாடாகவே தேர்தலுக்கு முன்னர் தனது பிடியில் வைத்திருந்த பிரதேச சபைகளைக்கூட ஜே.வி.பி. இழக்க வேண்டியதாயிற்று.

ஆக, ஜே.வி.பியின் திருகுதாளங்கள் இனிமேல் எடுபடப் போவதில்லை. எனவே மக்களின் ஆதங்கத்தை உணர்ந்து சமாதானத் தீர்வை எட்டுவதில் அரசும், படைத்தரப்பும் விசுவாசமாகச் செயலாற்ற வேண்டும்.

# இலங்கையில் பிரிவினவாதத்தை எதிர்க்கிறோம் பாகிஸ்தான் அதிபர் முஷாரப் தெரிவிப்பு

இலங்கையில் பிரிவினவாதத்தை பாகிஸ்தான் எதிர்ப்பதாக அந்நாட்டு அதிபர் பார்வேஸ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரச ஊடகமான டெய்லி நியூஸ் நாளேட்டிற்கு அவர் அளித்துள்ள நேர்காணலின் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் இது பற்றித்தெரிவிக்கையில்,

இலங்கையில் பிரிவினவாதத்தை நாம் எதிர்க்கிறோம் இலங்கையின் இறையாண்மையும் பிரதேச ஒற்றுமையும் மதிக்கப்படவேண்டும்.

இலங்கைத் தலைவர்களது எந்த ஒரு பயணத்தையும் பாகிஸ்தான் மகிழ்வோடு வரவேற்கிறது. இலங்கை நாட்டவரையும் இலங்கையின் தலைவர்களையும் எமது உண்மையான நண்பர்களாக நாம் எண்ணுகிறோம். இலங்கை ஒரு ஜனநாயக நாடு. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் மஹிந்த ராஜபக்ஷ.

இரு நாடுகளிடையேயான பொருண்மிய மற்றும் இதர ஒத்துழைப்பின்னூடாக அரசியல் உறவு மேலும் வலுப்படும். இதேவேளை, பயங்கரவாதத்திற்கான நிதி சேகரிப்பு, சர்வதேச அளவில் தடுக்கப்பட்டு பயங்கரவாதத்தை தோல்வியடையச் செய்யவேண்டும்.

இலங்க்கை இராணுவத்தில் என்னோடு பயிற்சி பெற்றவர்கள் உள்ளனர். அவர்களை பல்வேறு நிலைகளில் நான் பார்த்துள்ளேன். அவர்கள் மீது எனக்கு உயரிய மதிப்பு உண்டு. இலங்கை இராணுவம் ஒழுக்கமான கட்டமைப்பு கொண்டது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அச்சுறுத்தல்களில் இருந்து நாட்டை பாதுகாக்கவேண்டிய கடமை இராணுவத்திற்கு உண்டு என்றார். (கு)

# துணைக் குழுவினரை ஏற்றிச்சென்ற கலகம் அடக்கும் பொலிஸார்?

(கொழும்பு)

இராணுவ பாதுகாப்புடன், சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட துணைக்குழுக்களை கலகமடக்கும் பொலிஸார் வாகனத்தில் ஏற்றிச்சென்றதாக பொது மக்கள் தெரிவித்துள்ளனர். மற்றும்ஒரு கிராமத்தினை சுற்றி வளைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் தங்களால் முறியடிக் கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு வாழைச்சேனை பகுதியில் உள்ள தமிழ் கிராமங்களை கடந்த சில தினங்களுக்கு முன்பு இராணுவ பாதுகாப்புடன் துணைக்குழுக்கள் சுற்றிவளைத்தன.

ஆயுதமுனையில் மக்களை மிரட்டி ஆலயத்திற்கு செல்லுமாறும், அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது.

அத்துடன் துணைக் குழுக்களின் சில முக்கியமான உறுப்பினர்களை வாழைச்சேனை கலகமடக்கும் பொலிஸார் தமது வாகனத்தில் ஏற்றிக்கொண்டு சென்றதை நேரில் தாம் பார்த்ததாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

இன்னும் சிலரை வெள்ளை நிற எல்ப் வாகனத்தில் வாழைச்சேனை தபால் வீதியினூடாக இராணுவத்தினரும் பொலிஸாரும் பலத்த பாதுகாப்புடன் கொண்டு சென்றதாக வும் மக்கள் கூறுகின் றனர்.

இதேவேளை வாழைச்சேனை பகுதியின் மற்றொரு கிராமமான புதுக்குடியிருப்பு கிராமத்தினையும் துணைக்குழுக்கள் சுற்றிவளைக்க முற்பட்டபோது அப்பகுதி மக்கள் மனிதநேய அமைப்பின் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு காரணமாக சுற்றிவளைப்பு கைவிடப்பட்டுள்ளது.

முறைப்பாட்டியினையடுத்து சம்பந்தப்பட்ட இடத்திற்கு நிறுவனத்தின் வாழைச்சேனை பொறுப்பாளர் விரைந்து நிலைமைகளை பார்வையிட்டதாகவும் தெரியவருகின்றது.

தற்போது இப்பகுதி மக்களிடையே ஏற்பட்ட பதற்றநிலை தணிந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (கு)

# சட்டபூர்வமான காணிகள் இல்லாமையால் நிரந்தர வீடுகளைஅமைப்பதில் சிக்கல்

சுனாமி ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சட்ட வலுவான காணிகள் இல்லாமையினால் நிரந்தர வீடுகளை நிர்மாணித்துக்கொடுப்பதில் பெரும் சிரமங்களை சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் எதிர்நோக்கியுள்ளனர்.

இதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்க முடியா நிலை ஏற்பட்டுள்ளது. வடமராட்சி பிரதேசத்தில் உள்ள பொலிகண்டி கிராமத்தில் எட்டு இலட்சம் ரூபா பெறுமதியான புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கு போரூட் நிறுவனம் முன்வந்துள்ளது.

ஆயினும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அப்பகுதியில் இருக்கக்கூடிய கோவில் காணிகளில் குடியிருந்து வருவதால் அதில் இவர்களுக்கான நிரந்தர குடியிருப்புக்களை அமைக்க முடியாதுள்ளது.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான குடியிருப்புக்களை அவர்களது சொந்தக்காணியில் தான் அமைக்கமுடியும் என குறித்த அரச சார்பற்ற நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேசமயம் வீடுகளை நிர்மாணிப்பதற்கு வசதியாக காணிகளுக்கான உறுதிகளை காண்பிக்கும்படி பயனாளிகளிடம் கோரப்பட்ட சமயம் சட்டவலுக்கொண்ட காணி உறுதிகள் அவர்களிடம் இல்லை என அறியப்படுகின்றது.

பொலி கண்டிக்கிராமத்தில் போரூட் நிறுவனம் 100 வீடுகளை நிர்மாணிக்க முன்வந்துள்ளபோதிலும்கூட பயனாளிகளின் காணிப்பிரச்சினைகள் காரணமாக குறித்த வீடுகளை நிர்மாணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்க பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான வீடமைப்புத்திட்டத்தினை ஆரம்பிக்கும் படி அரசாங்க அதிபர் சம்பந்தப்பட்ட அரச சார்பற்றநிறுவனத்திற்கு அழுத்தம் கொடுத்துவருவதாகவும் அறியப்படுகின்றது. (த-16)

## தொழில் நுட்ப உபகரணம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி மற்றும் வலிகாமம் பிரதேசங்களில் இயங்கி வருகின்ற கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களையும் சமாசங்களையும் வலுவடையச் செய்யும் திட்டத்தின் கீழ் சர்வதேச கெயர் நிறுவனம் தளபாடங்கள் மற்றும் நவீன தொழில் நுட்ப உபகரணங்களை வழங்கிவருவதாக தெரிய வருகின்றது.

இத்திட்டத்தின் அடிப்படையில் சர்வதேச கெயர் நிறுவனம் மோட்டார் சைக்கிள்கள், போட்டோ பிரதி எடுக்கும் இயந்திரம் மற்றும் தளபாட வசதிகளை வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேசமயம் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இருக்கக்கூடிய நிறுவனங்களை வலுவடையச் செய்யும் முயற்சியில் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் தற்போது மிகவும் மும்முரமாக ஈடுபட்டுள்ளன என்றும் தெரிய வந்துள்ளது.

இவ்வகையில் வடமராட்சியில் உள்ள ஊற்று நிறுவனம் போரூட் நிறுவனத்தின் நிதி உதவியுடன் மூன்று கடற்றொழியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குகணனித்தொகுதிகள், போட்டோ பிரதிகள் எடுக்கும் இயந்திரம் மற்றும் முச்சக்கர வண்டி போன்வற்றினை அண்மையில் வழங்கியுள்ளது.

அத்துடன் யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டத்தின் (யு.என்.டி.பி) 80 இலட்சம் ரூபா நிதியுதவியுடன் 23 கிராமிய மட்ட அமைப்புக்களை வலுவடையச்செய்யும் திட்டத்தினை அமுல் செய்து வருகின்றது. (த-16)

## சுன்னாகம் பதி தாழையடி பூரணை புட்கலை சமேத ஸ்ரீ ஹரிகர புத்திர ஐயனார் பெருமானின் மஹோற்சவ பாடல்கள்



### இரண்டாம் திருவிழா

இராகம்-சிவரஞ்சனி தாளம் -ஆதி

பல்லவி

உன்னையல்லால் ஒரு தெய்வமில்லை எமக்கு
உற்றதுணை வேறு யாருமில்லை ஹரிகரா–
உன்னை

அனுபல்லவி

அன்னையாய் உயிர்களை காப்பவனே உனது
அருள் வேண்டி உருகுமெம்மை அறியாயோ பெருமானே–
உன்னை

சரணம்

ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பொருளே
சோதியே வானவர்தம் கோனே பெருநிதியே
ஐயனே எங்கள் பரம்பொருளே
சுன்னையுறை ஹரிகரா மறவா தெமக்கருள்வாய்–
உன்னை

ஆக்கம்-ஐயப்ப அடியவர்

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



நான் என்ற அகங்காரம் மறையாத வரையில் இந்த உடலே நாம் என்று நாம் நினைக்கும் வரையில் - பிறரிடமிருந்து நம்மைப் பிரித்து நான் என்று தனிப்பட்ட ஒருவராக நம்மை நினைக்கும் வரையில் சுயம் என்ற சொல்லுக்கு உரிய பொருள் குறுகி விடுகின்றது.

சுவாமி விவேகானந்தர்

## நாட்டு மக்கள் அனைவரும் 12 மணி நேரம் உண்ணாவிரதம் இருந்தால் இலங்கையில் இனப்பிரச்சினை தீரும்

### இந்திய சோதிடர் தகவல்

இலங்கையில் இந்த ஆண்டுக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டுவிடும் என்று இந்தியாவின் பிரபல சோதிடர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது அரசாங்கம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் மகிழ்ச்சிக்குரியதாகவிருக்கும். பேச்சுக்கள் மூலம் அமைதி முயற்சிகள் முன்னேற்றமடையும். அனைத்துத் துறைகளிலும் இலங்கை பாரிய வெற்றியடையும்.

நாட்டு மக்கள் அனைவரும் ஒரு நாள் காலை ஆறு மணி முதல் மாலை ஆறு மணிவரை உண்ணாவிரதம் இருந்தால் நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண உதவியாகவிருக்கும் என அவர் தெரிவித்துள்ளார். (ச)

## யாழ்.பொது அமைப்புகளுடனான சமகால அரசியல் கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட பொது அமைப்புகளுக்கு இடையிலான சமகால அரசியல் கலந்துரையாடல் நேற்று பளையில் நடைபெற்றது. பளை மத்திய கல்லூரியில் முற்பகல் 9 மணிக்கு நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் ஏற்றினர்.

தமிழீழத் தேசியக் கொடியினை நிகழ்வுக்குத் தலைமைதாங்கிய யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஏற்றினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை.சேனாதிராஜா, பத்மினி சிதம்பரநாதன், சிவநேசன், செ. கஜேந்திரன் ஆகியோர் அன்னை பூபதியின் திருவுருவப்படத்திற்கான மலர் மாலையினை அணிவித்தனர்.

மாவை. சேனாதிராஜா, பத்மினி சிதம்பரநாதன் , சிவநேசன், சிவாஜிலிங்கம் ஆகியோர் கருத்துரைகளை நிகழ்த்தினர். தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் சிறப்புரை நிகழ்த்தினார்.

சமகால அரசியல் கருத்துரையினை அரச அறிவியலாளர் மு.திருநாவுக்கரசு நிகழ்த்தினார். புதுவை அன்பனின் தெரு வழி நாடகம் நிகழ்வில் அரங்கேற்றப்பட்டது. (ச)

## அரசாங்கத்துடன் இணைவதற்கு சிறுபான்மைக் கட்சிகள் தீவிரம்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றி பெற்றதையடுத்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் விரைவில் அரசாங்கத்துடன் இணைவுள்ளதாக அக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

சமாதானம் தொடர்பான மகிந்தவின் வேலைத்திட்டங்களுக்கு இம் முறைத் தேர்தல் முடிபுகள் மேலும் வலுச்சேர்த்துள்ளதால் அரசாங்கத்துடன் இணைவதன் மூலம் அந்த நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்த முடியும் என அக் கட்சிகள் எண்ணுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


எதிர்வரும் வாரத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் அரசியல் பீடம் கூடி அரசாங்கத்தில் இணைவது தொடர்பாகவும் தற்போதைய அரசியல் நிலைமை மற்றும் தேர்தல் முடிபுகள் பற்றியும் பேச்சுவார்த்தை நடத்த தீர்மானித்துள்ளதாக கூறப்படுகின்றது.

பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மகிந்த நாடு திரும்பிய பின்னர் இக் கட்சிகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தக் கூடும் என்றும் கூறப்படுகின்றது. (ச-4,5)

## தற்காலிக அமைச்சர்கள் பொறுப்பேற்றனர்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பாகிஸ்தானுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள அமைச்சர்களுக்குப் பதிலாக 8 தற்காலிக அமைச்சர்கள் பதவியேற்றனர்.

பாதுகாப்புத்துறை அமைச்சராக பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவும், நிதித்துறை அமைச்சராக றஞ்சித் சியாம்பல பிட்டியவும், துறைமுக அமைச்சராக அன்ரன் தயாசிறித திசர, வர்த்தகத் துறை அமைச்சராக சிறிபால கம்லத், நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக ரோகண குமார திஸாநாயக்க, கல்வியமைச்சராக நிர்மல கொத்தலாவல, உட்கட்டமைப்பு அமைச்சராக சந்திரசிறி கஜதீர,சமூக சேவைகள் அமைச்சராக ஜகத் புஸ்பகுமார ஆகியோர் தற்காலிக அமைச்சர்களாகப் பதவியேற்றுள்ளனர்.(ச-5,4)



பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று பாகிஸ்தான் பிரதமர் ஸௌக்கட் அஸீஸை சந்தித்துக் கலந்துரையாடிய போது...

### அதியுயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து

## இடம்பெயர்ந்தோர் விபரங்களை தாக்கல் செய்ய நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தின் அதியுயர் பாதுகாப்பு வலயத்தால் இடம்பெயர்ந்தோர் விபரங்களை ஏப்ரல் 8 ஆம் திகதி தாக்கல் செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வலிகாமம் வடக்கில் அதி உயர் பாதுகாப்பு வலயத்தால் இடம்பெயர்ந்தோர் தங்கள் குடியிருப்புகளுக்குத் திரும்ப அனுமதிக்கும் விடயத்தில் நீதிமன்றம் தலையிட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராஜா அடிப்படை உரிமைகள் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இம் மனுவை விசாரித்த நீதிமன்றம் அதியுயர் பாதுகாப்பு வலயத்தால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கையை ஏப்ரல் 8 ஆம் திகதி நீதிமன்றில் தாக்கல் செய்ய சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டது.

இந்த வழக்கின் மேலதிக விசாரணையும் ஏப்ரல் 8 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நீதிமன்றில் மனுதாரர்களுக்காக சட்டத்தரணி சி.விநாயகமூர்த்தி ஆஜராகினார்.

முன்னர் நடைபெற்ற இந்த வழக்கு விசாரணையின் போது அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட பகுதிகளில் விவசாய செயற்பாடுகளுக்கு அனுமதிக்க வேண்டும் என்றும் அது தொடர்பிலான அறிக்கையை யாழ்ப்பாண அரச அதிபரிடமிருந்து பெற்றுத் தருமாறும் சட்டமா அதிபருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

அதன் பின்னர் நடந்த விசாரணையின் போது இதுதொடர்பிலான அறிக்கையை அரச அதிபரிடம் இருந்து பெற இயலவில்லை என்றும் கால அவகாசம்அளிக்க வேண்டும் என்றும் சட்டமாஅதிபர் கோரியிருந்தார்.

இந்நிலையில் ஏப்ரல் 8 திகதி அன்று இந்தத் தரவுகளை தாக்கல் செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வலிகாமம் வடக்கு 1990 ஆம் ஆண்டு அதியுயர் பாதுகாப்பு வலயத்தால் ஆயிரக் கணக்கானோர் இடம்பெயர்ந்து உறவினர் வீடுகளிலும் அகதி முகாம்களிலும் கடந்த 1[illegible] ஆண்டு காலமாக வசித்து வருகின்றனர். (ச-4,5)

### அரசாங்க...

சமாதானத்தை விரும்பும் மக்களின் வெற்றி என தமிழ்க்கூட்டமைப்பு எம்.பிக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந் நிலையில் அவர்களும் அரசுடன் இணைவதற்கான சாத்தியப்பாடுகள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

### பாகிஸ்தா...

வைபவத்தில் கலந்து கொண்ட பின்னர் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி இவ் விஜயத்தின் மூலம் பாகிஸ்தானுடன் இலங் கை வலுவான வர்த்தகத் தொடர்புகளை மேலும் முன்னேற்றலாம் எனத் தெரிவித்தார். (ச-5)

### துணைக்குழுக்களின் ஆயுதங்களை...

கண்காணிப்புக்குழுவின் தலைமைப் பதவியில் இருந்து நேற்று விலகிச் சென்ற போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த நாட்டின் அனைத்து நீர்ப்பரப்புகளும் கடற்படையின் கட்டுப்பாட்டில் உள்ளது. கடற்புலிகளுக்கு எதுவித உரிமையும் இல்லை.இதை விடுதலைப்புலிகள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவும் இல்லை.

ஒரு நாட்டில் இரு கடற்படை தொடர்பாக சர்வதேச அளவில் நடைமுறைகள் இல்லை. இப்போதுதான் நாம் இது தொடர்பிலான பிரச்சினைக்கு முகம் கொடுக்கின்றோம்.

இது தொடர்பில் மேலதிகமாக நான் வேறு எதையும் பேசவிரும்பவில்லை. ஏனெனில் அது ஆபத்தானதாக அமையும் கடற்பிரதேசத்தில் கடற்படையினர் நடமாட்டத்தை தடுக்கும் வகையிலான விடுதலைப்புலிகளின் அச்சுறுத்தல் காணப்படுகிறது என்றார்.

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் யுத்தத்திற்கு தயாராகவுள்ளனர். இது இயற்கையானது. ஆனால் அவர்களைக் கேட்டால் இல்லையென்றுதான் சொல்வார்கள்.

டிசம்பர் மற்றும் ஜனவரி மாத வன்முறைகளின்போது யுத்தநிறுத்த ஒப்பந்தம் முறியுமென்று நினைத்தேன்.ஆனால் அது காப்பாற்றப்பட்டு விட்டதன் மூலம் இரு தரப்பினரும் அமைதி வழித்தீர்வை விரும்புவதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் இராணுவ வழித்தீர்வு ஏற்படாது என நம்புகிறேன். ஏப்ரல் பேச்சுக்கள் நடைபெறும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. யுத்த நிறுத்தம் என்பது நிரந்தரத் தீர்வு அல்ல. துணை இராணுவக்குழுவினரது ஆயுதங்களை அரசாங்கம் களையா விட்டால் பாரிய அச்சுறுத்தலாக அமையும் என்றார்.

துணை இராணுவக்குழுவினருக்கு இராணுவம் உதவி செய்வதற்கான ஆதாரம் எதுவும் இல்லை. ஆனால் அப்படிச் செய்தால் அது மிகப்பெரும் தவறு. விடுதலைப்புலிகள் தாங்களே இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதாக அறிவித்து விட்டால் அது மிக மோசமான சூழ்நிலையை உருவாக்கி விடும் என்று அச்சப்படுகின்றேன்.

யுத்தம் ஒன்று ஏற்படுவதனைத் தடுப்பதற்கு இரு தரப்பினரதும் உயர் நிலைச் சந்திப்புகள் அவசியமானது. இவ்வாறான சந்திப்புகளை தள்ளிப்போடக்கூடாது.

இனியும் அமைதி முயற்சிகளைத் தாமதித்தால் நிலைமை மேலும் மோசமடையும். இதனைத் தடுப்பதற்கு இரு தரப்பினரும் உடனடியாக சந்திப்புகளை ஏற்படுத்துவார்கள் என நம்புகின்றேன்.

இலங்கையின் சமாதானத்திற்காக நான் இறைவனைப் பிரார்த்திக்கிறேன் என்றார் ஹக்றூப் ஹொக்லண்ட். (ச-4,5)

நந்தா,
தேஜா ஸ்ரீ ,
மற்றும்
பலர் நடித்த
01.04.2006 முதல்
கோடம்பாக்கம்
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

தங்கர் பச்சான்
நடித்த
சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி
சங்கானை கா.நே. 11.00, 2.45,6.00,(பு.நே)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.04.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.